ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3.] [தனி இதழ் அணா 4

மலர் 20 } ஏப்ரல் 1959 { இதழ் 4

சென்னை மாநில

உதவிபெறும் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் மாநாடு

அன்பழைப்பு

அன்புடையீர் !

வணக்கம். உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளின் உதவித் தொகைபற்றி அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள உத்தரவை ஆராய்வதற்காக இம் மாநாடு அரண்மனைக்காரன் தெருவில் உள்ள கோகலே மண்டபத்தில், 25—4—59 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். **திருவாளர் டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டியார், எம். ஏ., பி. எச். டி., எம். எல். சி., அவர்கள்** மாநாட்டைத் திறந்து வைக்கவும், **திருவாளர் கே. எஸ். இராமசாமி சாஸ்திரி, பி. ஏ., பி. எல்.** (முன்னாள் மாவட்ட நீதிபதி) **அவர்கள்** மாநாட்டிற்குத் தலைமை தாங்கவும் அன்புடன் இசைந்துள்ளனர்.

மிக முக்கியமான பிரச்சினையைப் பற்றி ஆராயவிருக்கும் இம் மாநாட்டிற்குத் தாங்கள் தவறாமல் வந்திருந்து தங்கள் ஆய்வுரைகளை அளித்து மாநாட்டைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

பி. வீரராகவன்,
தலைவர்,

ஏ. ஆர். சேஷாசலம்,
பொதுச்செயலாளர்,

சென்னை மாநில உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கம்.

நிகழ்ச்சி நிரல்

25—4—59 சனிக்கிழமை

காலை 9 மணி

திறப்பாளர் சொற்பொழிவு.
தலைவர் முன்னுரை.

பிற்பகல் 2 மணி

தீர்மான ஆய்வுக் குழுவின் கூட்டம்
(Subjects Committee Meeting)

மாலை 4 மணி

சொற்பொழிவுகள் :

திரு கே. கமலக்கண்ணன்
(சென்னை நகராட்சி மன்ற முன்னாள் மேயர்)

திரு ஏ. எம். இரத்தினசாமி
(பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்)

திரு பி. எஸ். செட்டியார்
(சென்னை நகராட்சி மன்ற உறுப்பினர்)

திரு மா. இளஞ்செழியன், எம். ஏ.
(விரிவுரையாளர், சென்னைப் பச்சையப்பன் கல்லூரி)

திரு எல். எஸ். மணி
(செயலாளர், தமிழ்நாடு பெற்றோர்களின் மத்திய சங்கம், சென்னை.)

திரு ஏ. கே. எஸ். சர்மா
,, பி. கிருஷ்ணமூர்த்தி

தீர்மானங்கள்

நன்றி நவிலல்.

ஏப்ரல் 25ல் சென்னையில் நம் மாநாடு

ஆரம்பப் பள்ளி நிர்வாகிகளே! தவருமல் வாருங்கள்!

உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளின் நிர்வாகிகளே,

கல்விப் பொருளை அள்ளி வழங்கும் அரும் பணியில் ஈடுபட்டுள்ள அன்பர்களே,

தென்னகத்தில் ஆரம்பக் கல்வியின் பொன்னொளியை முதன் முதல் பரப்பிய பெருமையும் புகழும் ஒருங்கே படைத்தவர்களே,

இக்காலச் சிறுவர்களை எதிர்காலக் குடிமக்களாக மாற்றி அமைக்கும் மாபெருந் தொண்டை ஆற்றிவரும் மாண்பு மிகுந்தவர்களே,

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்—ஆலயம் பதினாயிரம் நாட்டல்—அன்ன யாவினும் புண்ணியம் கோடி—ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்னும் கவிதையை வாழ்க்கையின் வழிகாட்டியாகக் கொண்டு பள்ளிகள் பலவற்றை நடத்தி வரும் பொறுப்பும் சிறப்பும் மிகுந்தவர்களே,

"இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர் என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால், துன்பங்கள் நீங்கிடும்—சுகம் வரும்—நெஞ்சினில் தூய்மை உண்டாகிடும்—வீரம் வரும்" என்கிற இதய கீதத்தை நடைமுறை நாதமாக மாற்றிக் காட்டிடும் நண்பர்களே,

அலை அலையாக எழும் இடையூறுகளையும் அடுக்கடுக்காக வரும் ஆபத்துகளையும் பொருட்படுத்தாமல் அனைவரும் புகழும் முறையில் பள்ளிகளை நடத்தி வரும் நல்லாற்றல் மிகுந்தவர்களே,

உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்—வாருங்கள் வாருங்கள் என்று அழைக்கிறோம்—அன்பும் பணிவும் நிறைந்த முறையில் அழைக்கிறோம்—சென்னைக்கு வாருங்கள், சிறந்த திட்டம் தீட்டுங்கள்; நாடாள்வோர் இழைக்க இருக்கிற மாபெருந் தவறைத் தடுத்து நிறுத்துங்கள் என்று அழைக்கிறோம்.

25—4—59 சனிக்கிழமை காலை 9 மணி அளவில் சென்னை நகரில் அரண்மனைக்காரன் தெருவில் உள்ள கோகலே மண்டபத்தில், சென்னை மாநில உதவிபெறும் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் மாநாடு நடைபெற விருக்கிறது. அந்த மாநாட்டில் வந்து கலந்து கொண்டு, உங்களுடைய அரிய கருத்துரைகளை அளித்து, மாநாட்டைச் சீரும் சிறப்பும் மிகுந்த முறையில் நடத்தித் தரவேண்டுமென்று உங்களை அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

மாநாட்டைத் திடீரென்று ஏற்பாடு செய்யவேண்டிய நெருக்கடி ஏற்பட்டுவிட்ட காரணத்தால், மாநாட்டைப் பற்றிய அறிவிப்பை முன்னதாகவே தெரிவிக்கமுடியவில்லை. மாநாடு நடைபெறுவதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் முன்னதாகத்தான் மாநாட்டு அழைப்புத்தாள் உங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடும். பத்து அல்லது பதினைந்து நாட்கள் முன்னதாகவே அழைப்புத் தாள் கிடைக்க முடிந்திருந்தால் உங்களில் பலருக்கு மிகவும் வசதியாக இருந்திருக்கும். மாநாட்டின் நிர்வாகிகளுக்கும் அத்தகைய முறையில் அழைப்புத்தாளை அனுப்பவேண்டும் என்றுதான் ஆசை. ஆனால் எதிர்பாராமல் ஏற்பட்ட பல்வேறு இடையூறுகள்—வசதிக் குறைவுகள் காரணமாக அவ்வாறு அனுப்பமுடியவில்லை. அப்படி அனுப்ப முடியவில்லையே என்று மாநாட்டு நிர்வாகிகளுக்கு மிகவும் வருத்தம்தான். என்றாலும் மிக முக்கியமான பிரச்சினையைப் பற்றி ஆலோசிப்பதற்காக இந்த மாநாடு நடைபெறுகிற காரணத்தால், இந்த வசதிக் குறைவைச் சிறிதளவும் பொருட்படுத்தாமல், நீங்களெல்லாம் திரள் திரளாக மாநாட்டில் வந்து குழுமவேண்டும் என்று மாநாட்டின் நிர்வாகிகள் உங்களை அன்போடு அழைக்கிறார்கள்.

தமிழ்நாட்டு அரசாங்கத்தார் அண்மையில் பிறப்பித்துள்ள ஓர் உத்தரவின் காரணமாக உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளின் எதிர்காலம் எத்தகைய ஆபத்துக்கு உள்ளாகியிருக்கிறது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அரசாங்கத்திடமிருந்து பண உதவி பெற்று வரும் ஆரம்பப் பள்ளிகள், அந்த உதவியைத் தொடர்ந்து பெறவேண்டுமானால், முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் எவரிடமிருந்தும் இனி கட்டணமே வசூலித்தல் கூடாதென்றும், அப்படி எந்தப் பள்ளிக்கூடமாவது இந்த மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்க விரும்பினால் அந்தப் பள்ளிக்கு அரசாங்க உதவித் தொகை எதுவுமே கிடைக்காது என்றும் அரசாங்க உத்தரவு தெரிவிக்கிறது. இந்த விபரீதம் மிகுந்த விசித்திரமான உத்தரவு வருகிற ஜூன் மாதத்திலிருந்தே நடைமுறைக்கு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கப் பண உதவியே இல்லாமல், மாணவர்களின் கட்டணத் தொகையை மட்டும் நம்பி ஆரம்பப் பள்ளிகளை நடத்த வேண்டுமானால், கான்வென்ட் பள்ளிகளில் வசூலிப்பதைப்போல, மிக அதிகமான தொகையை மாணவர்களிடமிருந்து வசூலிக்கவேண்டும். ஆனால் அந்த அளவுக்குக் கட்டணத்தைச் செலுத்தக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகத்தான் இருக்கமுடியும். மாதம் முன்னூறு ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள குடும்பங்களின் பிள்ளைகள் மட்டுமே அத்தகைய நிலையில் பள்ளிகளில் பயில முன் வருவார்கள். இப்போது ஓர் ஆரம்பப் பள்ளியில் கிட்டத்தட்ட 200 மாணவர்கள் பயில்கிறார்கள் என்றால், மேலே குறிப்பிட்டபடி உயர்ந்த அளவு கட்டணம் வாங்கும்போது ஏறத்தாழ 50 மாணவர்கள் மட்டுமே பயில முன் வருவார்கள். அந்த அளவு மாணவர்களை மட்டுமே வைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்தை நடத்துவது என்பது, சிறிதும் இயலாத செயலே ஆகும்.

அப்படியானால் இந்தத் திட்டம் வேண்டாம்—அரசாங்கத்தார் தருகிற பண உதவியை மட்டும் வைத்துக்கொண்டு, மாணவர்களிடமிருந்து கட்டணம் வாங்காமலே பள்ளிகளை நடத்தலாமே—அதிலென்ன தவறு இருக்கிறது—அப்படிச் செய்ய ஏன் தயங்குகிறீர்கள் என்று சிலர் கேட்கக்கூடும். ஆரம்பப் பள்ளியை நடத்துவதற்குத் தேவைப்படுகிற நியாயமான செலவு முழுவதையும் ஈடுகட்டுகிற அளவுக்கு அரசாங்கத்தின் பண உதவி இருக்குமானால் நிச்சயமாக அப்படிச் செய்யலாம். அதிலே தவறு இல்லை. தயங்கவேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் அரசாங்கத்தார் தருவதாகக் கூறுகிற பண உதவியின் அளவோ மிகச் சிறிது. பள்ளிக்கூடத்தின் மிக நியாயமான செலவுகளுக்காகத் தேவைப்படும் பணத்தின் அளவோ மிக அதிகம். இந்த இரண்டிற்கும் இடையே இருக்கிற இடைவெளியை அகற்றுவது எப்படி என்பதுதான் நமக்குப் புரியவில்லை. புரியாத காரணத்தால்தான் இந்தத் திட்டமும் நடைமுறைக்கு ஒவ்வாத திட்டம் என்பதை அழுத்தந் திருத்தமாக நாம் தெரிவிக்க விரும்புகிறோம்.

அரசாங்கத்தார் தரவிருக்கிற ஆசிரிய ஊதிய உதவித் தொகை (Teaching Grant), அந்தத் தொகையில் 15 அல்லது 20 சத விகிதத்திற்கு மேற்படாத நிர்வாக உதவித் தொகை (Management Grant) ஆகிய இந்த இரண்டு உதவித் தொகைகளை மட்டும் வைத்துக் கொண்டு, மாணவர்களிடமிருந்து கட்டணம் வாங்காமல் பள்ளிகளை நடத்துவது, ஒருநாளும் முடியாத செயலாகும்.

எடுத்துக்காட்டாக, திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த உதவி பெறும் ஆரம்பப் பள்ளி ஒன்றில் சென்ற ஆண்டில் ஐந்து ஆசிரியர்

களும், 202 மாணவர்களும் இருந்தார்கள். இந்தப் பள்ளிக்கூடத்தை நடத்துவதற்குச் சென்ற ஆண்டில் செய்யப்பட்டிருக்கிற செலவுகளின் விவரம் இது :—

	ரூபாய்
ஆசிரியர்களின் ஊதியம்	2634
,, பஞ்சப்படி	1622
பள்ளிக்கூடக் கட்டிட வாடகை	540
பள்ளிக் கட்டிடத்தைக் கூட்டிப் பெருக்கித் துப்புரவு செய்வோர், தண்ணீர் கொண்டுவருவோர் முதலியவர்களின் ஊதியம்	180
கல்விப் பயிற்சிக்குத் தேவைப்படும் கருவிகள், பண்டங்கள், வெண்சுண்ணத் துண்டுகள் முதலியன வாங்க	128
ஆசிரியர்களின் நல்வாழ்வு நிதிக்கு (T. P. F.) நிர்வாகிகள் செலுத்தவேண்டிய பங்கு	49
மாணவர்களின் சொற்பயிற்சிக் கழகம்; பள்ளிக்கூட விழாக்கள் முதலியவற்றின் செலவு	31
நூல் நிலையப் புத்தகங்கள், விளையாட்டுச்சாமான்கள், நாட்டுப் படங்கள், கருத்து விளக்கப் படங்கள் முதலியவற்றிற்கு	59
தபால் செலவு	31
ஆக மொத்தம் ஓராண்டுக்கு ஆகியுள்ள செலவு	5274

இந்தப் பள்ளிக்கூடத்திற்கு அரசாங்கத்தின் புதிய திட்டத்தின் படி கிடைக்கக்கூடிய வருமானத்தின் விவரம் :—

	ரூபாய்
ஆசிரிய ஊதிய உதவித் தொகை	2600
ஆசிரியர்களின் பஞ்சப்படிக்கான உதவித் தொகை	1596
நிர்வாக உதவித் தொகை (ஆசிரிய ஊதிய உதவித் தொகையில் 15%)	390
ஆக மொத்தம் ஓராண்டுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் ரூ.	4586

அரசாங்கத்தாரின் புதிய உத்தரவின்படி இந்தப் பள்ளிக்கூடத்திற்குக் கிடைக்கக்கூடிய மொத்த வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூபா 4586 ஆகும். இதே நேரத்தில் இந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஆகக்கூடிய மிகக் குறைந்த மிக நியாயமான செலவு ஆண்டு ஒன்றுக்கு

ரூ. 5274 ஆகும். ஆகவே வரவைவிட செலவு 688 ரூபாய் அதிகப் படியாக இருப்பதைக் காண்கிறோம். அரசாங்கத்தார் 20 சத விகிதம் நிர்வாக உதவித் தொகை தருவதாக வைத்துக்கொண்டால், அந்தத் தொகையின் அளவு 520 ரூபாயாக இருக்கும். அப்போது ஓராண்டின் மொத்த வருமானம் 4716 ரூபாயாய் உயரும். அப்படி உயர்ந்தால்கூட, வரவை விடச் செலவு 558 ரூபாய் அதிகப்படியாக இருக்கும். மாணவர்களிடமிருந்து கட்டணமே வாங்கக்கூடாது என்று ஆட்சியாளர்கள் தெரிவித்தால் இந்தத் துண்டு விழும் தொகையை ஈடுகட்டுவதற்குப் பள்ளி நிர்வாகிகளுக்கு எந்தவித வழியும் இல்லே. அப்படியானுல் அவர்கள் பள்ளிக்கூடத்தைத் தொடர்ந்து நடத்துவது எப்படி? இந்தக் கேள்வியை நாம் பலமுறை கேட்டாகிவிட்டது. நாடாளும் ! அமைச்சர்கள் இதுவரை இந்தக் கேள்விக்கு எத்தகைய விடையும் அளிக்கவில்லே.

மற்ருேர் உதவிபெறும் ஆரம்பப்பள்ளி—இது, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தது—புதிய உத்தரவால் இந்தப் பள்ளிக்கூடம் எப்படிப் பாதிக்கப்படுகிறது என்பதைக் கவனிப்போம்.

இந்தப் பள்ளிக்கூடத்தில் சென்ற ஆண்டில் நடைபெற்ற செலவுகளின் விவரம்:—

	ரூபாய்.
ஆசிரியர்களின் ஊதியம்	3978
,, பஞ்சப்படி	2545
கட்டிட வாடகை	764
ஆயா ஊதியம் (மாதம் ரூ. 15 வீதம்)	180
குப்பைக்காரன் ஊதியம் (மாதம் ரூ. 5 வீதம்)	60
தண்ணீர் கொண்டு வருபவர் ஊதியம் (மாதம் ரூ. 3 வீதம்)	36
மேசை, நாற்காலி, கரும்பலகை முதலியவற்றைச் செய்யவும், பழுதுபார்க்கவும்	166
காகிதம் பென்சில் முதலிய சில்லறைச் சாமான்கள்	57
விளையாட்டுகளுக்கு	15
பத்திரிகைகள்	25
முதல் சிகிச்சைக் கருவிகள்	5
தபால் செலவு	23
அரசாங்க உதவித் தொகை செக்கை மாற்ற	27
குடியரசுத் திருநாள், பெற்ருேர் நாள் முதலிய விழாக்களுக்கு	61
கல்விப் பயிற்சிக்குரிய கருவிகள் வாங்க	54

கட்டிடத்திற்கு வெள்ளையடித்தல் பழுது பார்த்தல் முதலியவற்றிற்கு	70
நூல்நிலையப் புத்தகங்கள்	2
சில்லறைச் செலவுகள்	7
மொத்தச் செலவு	8075

8 ஆசிரியர்களும் 294 பிள்ளைகளும் உள்ள இந்த பள்ளிக்கூடத்திற்கு, அரசாங்கத்தின் புதிய உத்திரவின்படி கிடைக்கக்கூடிய வருமானங்களின் விவரம்:—

ஆசிரிய ஊதிய உதவித்தொகை	ரூ.	3711
பஞ்சப்படி உதவித்தொகை	ரூ.	2446
நிர்வாக உதவித்தொகை (15 சத விகிதப்படி)	ரூ.	555
மொத்த வருமானம்	ரூ.	6712

மொத்தச் செலவு	ரூ.	8075
மொத்த வரவு	ரூ.	6712
ஆகவே அதிகப்படி செலவு	ரூ.	1363

மாணவர்களிடமிருந்து கட்டணம் ஏதும் வசூலிக்காமல், அரசாங்கத்தார் அளிக்கக்கூடிய 15 அல்லது 20 சத விகித நிர்வாக உதவித் தொகையை மட்டும் வைத்துக்கொண்டு பள்ளிக்கூடங்களை நடத்துவது முடியாத செயல் என்பதை இந்த இரண்டு உதாரணங்களும் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன.

ஆகவே மாணவர்களிடமிருந்து கட்டணம் வாங்காமல் ஆரம்பப் பள்ளிக்கூடங்களைத் தொடர்ந்து நடத்தவேண்டுமானால், அதற்கு இருக்கிற ஒரே வழி, நிர்வாக உதவித் தொகையை, 15 அல்லது 20 சத விகிதம் என்னும் மிகக் குறைந்த அளவிலிருந்து, நியாயமாகத் தேவைப்படுகிற அளவுக்கு உயர்த்துவதுதான்.

பள்ளிக்கூடக் கட்டிட வாடகை முழுவதையும் அரசாங்கத்தார் அளித்துவிட்டு, அதனோடுகூட 30 சத விகித நிர்வாக உதவித் தொகையையும் தரவேண்டுமென்றும், அப்படித் தந்தால்தான் பள்ளிக்கூடங்களைத் தொடர்ந்து நடத்த இயலும் என்றும், சென்னை மாநில உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கத்தார் ஏற்கெனவே ர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள்

அந்தத் தீர்மானத்தை ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொண்டால், இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி எளிதில் தீர்ந்துவிடும்.

இந்தப் பிரச்சினைகளையெல்லாம் அலசி ஆராயவும், நம்முடைய கோரிக்கையில் உள்ள நியாயத்தை ஆட்சியாளர்களுக்கு வற்புறுத்திச் சொல்லவும், பொது மக்களுக்கு உண்மை நிலைமையைத் தெளிவாக எடுத்து விளக்கவும், ஆரம்பப் பள்ளிகளின் எதிர்காலத்தை விழுங்க வருகிற பேராபத்தை விரட்டியடிக்கவுமே இந்த மாநாடு கூட்டப்படுகிறது மிக மிக நெருக்கடியான நேரத்தில் கூட்டப்படுகிற இந்த மாநாட்டில் நீங்களெல்லாம் கலந்துகொள்ளவேண்டியது அவசியத்திலும் அவசியம் என்பதை நாங்கள் இயம்பவும் வேண்டுமோ ?

இது ஜனநாயக சகாப்தம். இந்த சகாப்தத்தில் கிளர்ச்சி செய்பவர்கள்தான் பயன் அடைவர். தங்களுடைய கோரிக்கைகளை உரத்த குரலில் நாடாள்வோருக்கு எடுத்துக் கூறுபவர்கள்தான் வெற்றி பெறுவர். ஒரு கோரிக்கை நியாயமானது என்ற காரணத்தால் மட்டும் இந்தக் காலத்தில் வெற்றி பெற்றுவிடாது. அந்த நியாயத்தின் பின்னால் போதுமான அளவு கிளர்ச்சிப் பலம் இருக்கிறது என்பதை ஆட்சித் தலைவர்கள் உணர்ந்தால்தான் அந்த நியாயம் அவர்களால் ஒப்புக்கொள்ளப்படும். 'அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்' என்கிறார்களே, அந்தப் பழமொழியின் உட்பொருள், ஜனநாயக சகாப்தத்திற்கு நூற்றுக்கு நூறும் பொருந்தி வரும் ஓர் மாபெரும் உண்மையாகும்.

ஆகவேதான், போன்புமிக்க நிர்வாகிகளே, விரைந்தோடி வாருங்கள் மாநாட்டுக்கு என்று மீண்டும் மீண்டும் அழைக்கிறோம்.

கவனமிருக்கட்டும் — நண்பர்களே — கவனமிருக்கட்டும் — சென்னை நகரத்தில்—ஏப்ரல் 25-ம் நாள் காலை மாநாடு தொடங்குகிறது. தவறாமல் வாருங்கள். ஆரம்பப் பள்ளிகளின் எதிர்காலத்திற்கு நல்லதோர் நிலையைப் பெற்றுத் தர வழி வகை கூறுங்கள். ஆட்சியாளர்கள், நம் கோரிக்கையில் உள்ள நியாயத்தை ஒப்புக்கொள்வதற்கு ஏற்ற திட்டங்களைத் தீட்டுங்கள்.

வாருங்கள்—வாருங்கள்—தவறாமல் வாருங்கள்.

எல்லாம் கணக்கு! எங்கும் கணக்கு!!

(G. முகமது உசேன், ஆசிரியர், மஜ்லிசுல் உலமா உயர்தர ஆரம்பப் பாடசாலை, பந்தயவட்டம், திருச்சி.)

கட்டுரை எழுதவேண்டும் என்று உட்கார்ந்ததுமுதல் ஐந்து, பத்து என்று நிமிடங்கள் மட்டுமின்றி, அரை, ஒன்று, ஒண்ணரை, இரண்டு என மணிகளும் கழிந்துகொண்டே இருந்தன. கழியும் மணிகளுக்கு 'நேர் விகிதத்தில்' கழியும் காகிதங்களின் எண்ணிக்கையும் உயர்ந்துகொண்டே சென்றது.

முடிவு.........?

பூஜ்ஜியம்...! அலுப்புடன் நாற்காலியில் சாய்ந்தேன். "உங்களைத்தானே! எதற்கும் கணக்கில்லையா? இப்படி மணிக்கணக்காகத் தூக்கத்தைக் கெடுத்துக்கிட்டு எழுதிட்டிருந்தா உடம்பு என்னத்துக்காகும்?" என்று கூறிக்கொண்டு வாஞ்சையுடன் என் தலையை வருடினாள், என் உள்ளத்தைக் கவர்ந்த இல்லக்கிழத்தி.

அரைதூக்கத்திலிருந்த என்னை அவளுடைய இன்மொழி கணக்கிலடங்கா இன்பத்தில் ஆழ்த்தியது. அவளது குழலிலிருந்து வெளிப்பட்ட மல்லிகையின் நறுமணமும், ஆதூரத்துடன் என் முன் மேஜையில் சாய்ந்து தன் மெல்லிய மலர்க் கரங்களால் என் முகத்தை வருடியதும், என்னைப் போதையில் ஆழ்த்தியது. "அளவற்ற ஆசையுடன் அவளது மதி வதனத்தை ஸ்பரிசித்தேன்.

அடுத்தகணம்.........!

உஸ்......! அம்மா......!!

என்ற அலறலுடன் நான் நாற்காலியிலிருந்து ஓர் துள்ளு துள்ளிக் கீழே விழுந்தேன்.

அப்போதுதான் எனக்கு நினைவிற்கு வந்தது நான் ஓர் கட்டைபிரமச்சாரி என்று—என் முன் தோன்றியது. கன்னியின் மதிமுகமல்ல, என் முன் எரிந்துகொண்டிருந்த விளக்கின் சூடான சிம்னியே என்று.—உதறும் கையுடன் என் கற்பனை கன வேகமாக வேலை செய்ய ஆரம்பித்தது.

"எதற்கும் கணக்கில்லையா? ....'' என்ற சொற்கள் காதுகளிலே ரீங்காரமிட ஆரம்பித்தன. 'கணக்கின் மகத்துவத்'தைத் தலைப்பாகக்கொண்ட ஓர் கட்டுரையை ஏன் எழுதக்கூடாது என்ற கேள்வி என்னுள் எழுந்தது. அடுத்த கணம் எழுத ஆரம்பித்தேன். அப்போது கடிகாரம் பன்னிரண்டு முறை அடித்து ஓய்ந்தது.

இந்தக் கணக்கிருக்கிறதே அது உலகத்தையே ஆட்டிப் படைக்கக்கூடிய சக்திவாய்ந்தது. இது

சம்பந்தப்படாத விஷயமே இல்லை என்று கூறலாம். சிறுவர்களுக்குத் தலைவேதனை கொடுக்கும் பாடமாகவும், குடும்பிகளுக்கு வரவையும் செலவையும் சரிக்கட்ட (சந்திக்கச்செய்ய) முடியாத சமாந்திரக் கோடாகவும், பாங்க் குமாஸ்தாக்களுக்கு அவர்களது செக்யூரிட்டிகளைப் பறிக்கப் பயமுறுததும் பாசக் கயிருகவும், வியாபாரிகளுக்கு வருமான வரி அதிகாரியிடம் அடிபணியச் செய்யும் சூத்திரதாரியாகவும், நிதி நிபுணர்களுக்கு ஒரு நிரந்தரத் தொல்லையாகவும், நிதி மந்திரிகளுக்கு வரிபோட உதவும் வரப்பிரசாதமாகவும் விளங்குகிறது. இவ்வாருக இந்தக் கணக்கு அரசன் முதல் ஆண்டிவரையிலும், பட்டம் பெற்றவர் முதல் பள்ளிக்கூடமே பார்த்திராத பாமரர்வரையிலும்,

" அங்கிங்கெனுதபடி
எங்கும் பிரபலமாய்
அளவற்ற குழப்பமாக்கி "

எங்கும், எதிலும் விரிந்து கிடக்கிறது.

கணக்கிற்கும் பள்ளிக்கூட மாணவர்களுக்கும் எப்போதும் ஏழாம் பொருத்தம்தான். மாணவர் சமூகத்தின் பரம வைரி இந்தக் கணக்குத்தான். கணக்குப் பரிட்சை என்ருலே அன்று பிள்ளையாருக்குக் கணக்கற்ற தேங்காய்கள் உடைப்பதாகப் பிரார்த்தனைகள் பெருகும். முன்பரிட்சைகளில் எல்லாம் போடப்படாத பிள்ளையார் சுழி அன்றுமட்டும் விடைத் தாள்களின்மீது கம்பீரமாகக் காட்சியளிக்கும். நம் மாணவ மணிகளுக்குக் 'கணக்கின்மேல் இருக்கும் அளவுகடந்த ஆசையின் (!) காரணமாகத்தான் அதன் பிரிவுகளான 'அல்ஜிப்ரா'வை 'கோப்ரா' அல்லது 'காப்ரா' கணக்கு என்றும், ஏககால சாம்யத்தை கஷ்டகால சாம்யம் என்றும், ரேகாபடத்தை தொலைந்து போகாப்படம் என்றும் செல்லப் பெயர்களிட்டு அழைக்கிருர்கள்.

கணக்குப் பேரிடுடன் இந்தக் கணக்குத் தொலைகிறதா? சரித்திரப் பாடத்தில் ஓர் அரசன் பட்டமேறிய வருடம், இறந்த வருடம் கொடுத்து அவ்வரசன் ஆண்ட வருடங்கள் கண்டுபிடிக்கும் உருவத்திலும், பூகோளத்தில் ஓர் இடத்தின் அட்சு, தீர்க்க ரேகைகளைக் கொடுத்து, அதன் தூரத்தையும் நேரத்தையும் கண்டுபிடிக்கச்செய்யும் ரூபத்திலும், விஞ்ஞானத்தில் ஓர் உப்பின் கரைமானத்தையும், ஓர் பொருள் தண்ணீரில் இழக்கும் எடையையும் கண்டுபிடிக்கும் உருவத்திலும் தலைநீட்டுகிறது. இந்தக் கணக்குப் பாடத்தைப் பள்ளிக்கூடப் பாடங்களிலிருந்தே ஒழிக்க எந்தக் கட்சி இப்போது சட்டம் கொண்டுவருகிறதோ அதற்கே எதிர்காலத்தில் (வோட்டுரிமை பெற்றபின்) தங்கள் வோட்டுக்களை போடப் போவதாக மாணவர்கள் முடிவு செய்துவிட்டார்கள் என்ருல் பார்த்துக்கொள்ளுங்களேன் !!

அடுத்தபடியாக இந்த கணக்கு இளந் தம்பதிகளின் இன்ப வாழ்வுக்குப் பரம வைரியாகும். இல்லாவிட்டால் அவர்கள் இன்பமாகப் பேசிக்கொண்டிருக்கும் போது மனைவி, முதல் தேதிக்குக் கொடுப்பதாகச் சொல்லி வாங்கி வந்த புடவைகளையும் நகைகளையும் பெருமையுடன் காட்ட, இந்தக் கணக்கு, கணவனின் மனதில், 'இம்மாதம் ஆன கடன்' என்ற வடிவத்தில் தோன்றி அவனை எரிமலையாகத்தான் குமுறச் செய்யுமா? இந்தக் கணக்கு இருப்பதனால்தானே, மனைவி கணக்குப் பார்க்கும் கணவனிடம் கணக்காக ஒரு சொட்டு கண்ணீர் விட்டு, தான் விரும்பும் பொருளை அடையவேண்டி இருக்கிறது. கணக்கு இல்லாவிட்டால் மனைவி நகைகளுக்கும், புடவைகளுக்கும் செலவழிக்கும் பணத்திற்குக் கணக்குத்தான் இருக்குமா? இல்லை—அவன் அனுபவிக்கும் துன்பத்திற்குத்தான் கணக்கிருக்குமா?

இந்தக் கணக்கின் மகிமையைத்தான் பாருங்களேன். சிலரைக் கடாட்சித்து ராஜ வாழ்வையும், சிலரை வஞ்சித்து அடிமை வாழ்வையும் அளிக்கிறது. இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள்தான் வியாபாரிகள். கணக்கப்பிள்ளைகளிடம் அவர்களுக்கு இருக்கும் பயமும், அவர்களுக்குக் காட்டும் மரியாதையுமே இதை நிரூபிக்கிறது. அது மட்டுமா, தங்களுடைய கணக்குகளை வருமானவரி அதிகாரிகளிடம் காண்பித்து அதை ஏற்றுக் கொண்டதற் கடையாளமாக அவைகளில் ஆபீஸ் முத்திரை வாங்கும் வரையிலும், அவர்களது மன நிலை விவரிக்க இயலாது. கம்பர் மட்டும் இக்காலத்தில்வாழ்ந்திருந்தால்,

"வருமானவரி அதிகாரி முன்
செல்லும் வியாபாரியின்
நெஞ்சம்போல் கலங்கினன்
இலங்கை வேந்தன்"

என்றே பாடியிருப்பார். அது மட்டுமல்ல, 'நயாபைசா' என்ற ரூபத்திலே இந்த கணக்கு எல்லோருக்கும் பாரபட்சமின்றி செய்துவரும் 'நயாகுழப்ப' கைங்கரியம் இருக்கிறதே அது கணக்கிற்கு அப்பாற்பட்டதாகும்.

பாரில் எல்லோரையும், தனதடிமைகளாக்கி வெற்றி முரசு கொட்டும் இந்தக் கணக்கின் ஜம்பம் நிதி மந்திரிகளிடம் மட்டும் பலிப்பதில்லை. வரவையும், செலவையும் சரிக்கட்ட முடியவில்லையே என்று அவர்கள் சிறிதளவும் கவலைப் படுவதே இல்லை. துண்டு விழும் தொகை எத்தனை கோடி ரூபாயாக இருந்தாலும் அவர்கள் கவலைப்படுவதில்லை. மாறாக கணக்கற்ற குதூகலத்துடன் கணக்கிற்குட்பட்ட சில புதிய வரிகளைப் புகுத்திவிட்டு வெற்றிப் புன்னகை பூக்கிறார்கள் என்றால் நிதிமந்திரிகளின் திறமை தான் கணக்கிலடங்குமா?

கடைசியாகக் கணக்கைப்பற்றிக் கணக்கில்லாமல் வளர்ந்து

கொண்டே போகும் இக்கட்டுரையை ஆசிரியர் எப்படித்தான் கணக்குத் தீர்க்கப்போகிறரோ ! இது கணக்கிற்குட்பட்ட பிரசுரிக்கும் கட்டுரைகளில் கணக்கிடப்படுமா, அல்லது காகிதக் கூடையிலிருக்கும் கணக்கற்ற காகிதங்களுடன் கணக்கிடப்படுமா, என்பதைக் கணக்கிற்குட்பட்ட சில நாட்கள் காத்திருந்தால்தான் எனக்குக் கணக்கு பிடிபடும்.

உதிர்ந்த முத்துக்கள்

இயற்கைக் காட்சிகளில் மிக இனியது—மாலை நேரத்தில் ஞாயிறு மறைவது.—மனித உணர்ச்சிகளில் மிக அழகியது—கோபத்தால் கொந்தளித்த மனிதன், அது தீர்ந்து உறங்கப் போவது.

—தாமஸ் டி. குவின்சி.

உண்மை! அதன் அளவுக்கு ஆற்றல் நிரம்பிய பொருளும் வேறு கிடையாது. அதுபோல விசித்திரம் மிகுந்த பண்டமும் இன்னொன்று இல்லை.

—டேனியல் வெப்ஸ்டர்.

எவ்வளவு கூர்மையான கத்தியானாலும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தினால் அதன் கூர்மை குறைந்துவிடும். ஆனால், நாக்கு ! அது ஒரு விசித்திரமான கத்தி! பயன்படுத்தப் பயன்படுத்த அதன் கூர்மை மிகுதியாகும் !

—வாஷிங்டன் இர்விங்.

மக்களுக்கு மகிழ்ச்சியை அளிப்பது அல்ல—மக்கள் தங்களுக்குத் தாங்களே மகிழ்ச்சியைத் தேடிக்கொள்வதற்கான வாய்ப்புகளை அளிப்பது—இதுதான், ஓர் சிறந்த அரசாங்கத்தின் தலையாய கடமை.

—வில்லியம் கானிங்.

யாருக்கும் தெரியாமல் நான் ஒரு நற்செயலைச் செய்ய வேண்டும். ஆனால், அது தானாகவே எல்லோருக்கும் தெரிந்துவிட வேண்டும். அப்போதுதான் எனக்கு முழு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

—சார்லஸ் லாம்ப்.

சென்னை நகராட்சி மன்றம்

தேர்தல் முடிவு

ஏப்ரல் முதல் வாரத்தில் நடைபெற்ற தேர்தலில் சென்னை நகர சபைக்குள்ள நூறு ஸ்தானங்களில் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி 45 ஸ்தானங்களைப் பெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு 37 ஸ்தானங்களே கிடைத்துள்ளன.

பல வருஷங்களாகச் சென்னை நகரசபையில் பெரும்பான்மை இடம் பெற்று வந்த காங்கிரஸ் கட்சி அந்த ஸ்தானத்தை இழந்து விட்டது. தி. மு. கட்சி 45 இடங்களைப் பெற்றிருக்கிறது. மொத்தம் 90 இடங்களுக்கே அக் கட்சி அபேட்சகர்களை நிறுத்தியிருந்தது. 100 ஸ்தானங்களுக்கும் போட்டியிட்ட காங்கிரஸ் 37 ஸ்தானங்களையே பெற்றது. சுயேச்சை வாதிகள் 13 பேர் வெற்றி பெற்றுள்ளனர். பி. சோ. கட்சிக்கும், கம்யூனிஸ்டு கட்சிக்கும் தலா 2 ஸ்தானங்கள் கிடைத்துள்ளன. சோஷலிஸ்டு கட்சி ஒரு ஸ்தானம் பெற்றிருக்கிறது.

தற்போது தெரிந்தெடுக்கப்பட்டுள்ள 100 அங்கத்தினர்களில் 3 பேர் பெண்கள். ஒரு ஸ்திரீ தி. மு. கட்சியைச் சார்ந்தவர். இருவர் காங்கிரஸ் கட்சியினர். குறைந்த பட்சம் 10 பேர்கள் ஷெடியூல்டு வகுப்பினர்கள் நகர சபையில் தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்று விதியிருக்கிறது. ஆனால் 10 பேர்களுக்கு மேலாகவே ஹரிஜன வகுப்பினர் தெரிந்தெடுக்கப்பட்டுவிட்டனர்.

சுயேச்சையாக நின்று வெற்றி பெற்றவர்களில் 3 பேர்கள் தி. மு. க. வின் ஆதரவாளர்கள் என்று கூறப்படுகிறது.

சென்னை நகர வாக்காளர்கள் தொகை 9,36,314. இதில் சுமார் 4 லக்ஷம் பேர்களுக்கு மேல் வோட் செய்துள்ளனர். மொத்தம் 1453 வோட்டுப் பெட்டிகள் எண்ணப்பட்டன.

—'சு. மி.'

உதிர்ந்த முத்துக்கள்

உலகத்தில் ஒரே ஒரு பாவம்தான் இருக்கிறது. அதன் பெயர் தான் முட்டாள்தனம்.

—ஆஸ்கார் ஒயில்டு.

இடுக்கண் வருங்கால், அதைக் கண்டு நகைக்கும் இதயம்—அது தான் செல்வத்தினும் சிறந்தது. அறிவினும் உயர்ந்தது.

—ஹென்ரி மில்மான்.

புதிய பாடத்திட்டப்படி இயற்றப்பட்ட —

சிறுவர் சமூக நூல்

நான்காம் வகுப்பு

ஆசிரியர் :

T. S. உமாபதி, M.A., L.T. (Dip.in.Geog.)

சென்னை மாவட்டம்
செங்கற்பட்டு மாவட்டம்
தென் ஆர்க்காட்டு மாவட்டம்
வட ஆர்க்காட்டு மாவட்டம்
திருச்சி மாவட்டம்
தஞ்சை மாவட்டம்
கோயமுத்தூர் மாவட்டம்
சேலம் மாவட்டம்
நீலகிரி மாவட்டம்

ஒவ்வொன்றும் விலை ரூ. 1·87

மாதிரிப் பிரதி வேண்டுவோர் (ஒவ்வொன்றுக்கும்) ரூ. 1-30 ந. பை. அனுப்பவும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
('ஆரம்பக்கல்வி' ஆபீஸ்)
94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1.

குறிப்பு : *அங்கீகாரமான தேதி பின்னர் அறிவிக்கப்படும்*

புதிய பாடத்திட்டப்படி இயற்றப்பட்ட ...

சமூக பாடப் பயிற்சி நூல்

நான்காம் வகுப்பு

ஆசிரியர் :

T. S. *உமாபதி*, M.A., L.T. (Dip.in-Geog.)

சமூக பாடத்தைக் கற்பிக்கும்போது பாடங்களை மட்டும் கற்பிப்பது பயனற்றது என்பது அறிஞர்களின் கருத்து. இது பற்றியே பாடத் திட்டத்திற் செய்முறைகள் தனியே தரப்பட்டுள்ளன. அச் செய்முறைகளை மேற்கொள்ள ஆரம்பப் பள்ளிகள் எல்லாவற்றிலும் ஏற்ற சூழ்நிலை இருப்பது அரிது. ஆதலால், இத்தகைய **சமூக பாடப் பயிற்சி நூல்** *அத்தகைய குறையை நீக்கி குழந்தைகட்குச் சிறந்த முறையில் செய்முறைப் பயிற்சி அளிக்க உதவும் என்பது உறுதி. இந்நூல் சமூக பாட நூல்கள் எழுதுவதில் நீண்ட அனுபவமுள்ள திரு.* **T. S. உமாபதி,** *அவர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பதால் இதன் சிறப்பைப் பற்றி அதிகம் கூற வேண்டுவதில்லை.*

சென்னை மாவட்டம்
தென் ஆர்க்காட்டு மாவட்டம்
வட ஆர்க்காட்டு மாவட்டம்
கோயமுத்தூர் மாவட்டம்
சேலம் மாவட்டம்
நீலகிரி மாவட்டம்

ஒவ்வொன்றும் விலை 55 காசுகள்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
('ஆரம்பக்கல்வி' ஆபீஸ்)
94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை—1.

குறிப்பு : *மற்ற மாவட்டப் பயிற்சி நூல்கள் விரைவில் வெளியிடப்படும்.*

மருது பாண்டியர்

தாமரைக் கண்ணன்

காட்சி 22

புதுக்கோட்டை

கர்னல் பிளாக்பர்ன் தங்கும் வீடு.

(பிளாக்பர்ன், தொண்டைமான், கறுத் தான் முதலியோர்.)

தொண்டைமான் :—உண்மைதான், பிரபு! பெரிய மருது பேச்சை நிறுத்தினான். பேய்மழை பெய்துவிட்டதைப்போல இருந்தது.

கறுத்தான் :—ஆமாம், சார்! இங்கேயே வந்து ஒரு உலுக்கு உலுக்கிவிட்டார்கள். நாங்க இரண்டு பேரும் ஆடி அசந்து விட்டோம்.

பிளாக்பர்ன் :—...ம்... ஆச்சரியந்தான்!

தொண்டை :—எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. போரின் முடிவு எப்படியிருக்குமோ......அதற்குள் நான் என் கல்யா ணத்தை முடித்துக்கொள்கிறேனே!

பிளாக் :—அது முட்டாள்தனம்! மருது பாண்டியரை ஒழிக்கும் வரை கல்யாணமே செய்து கொள்வதில்லை என்று உறுதி எடுத் துக் கொள்ளுங்கள். அவர்களை அடக்கம் செய்த சமாதியின் மீது 'ஜாம்...ஜாம்' என்று பிரமாதமாக திருமணம் நடத்திக் கொள்ளலாம்...!

கறுத் :—வாட்... வாட்...? பிணத்தின் மேல் கல்யாணமா? அய் யய்யே......

தொண்டை :—முட்டாள்! எங்கு நடந்தால் என்ன? மொத்தத்தில் மருதுப்பயலுக ஒழியணும்...

பிளாக் :—ஆங்... அதுதான் புத்திசாலித்தனம்! ஆமா(ம்)... சிவ கங்கைச் சீமையில் அவர்களுக்கு விரோதமாக ஒருவர்கூட இல்லையா?

கறுத் :—இருக்கிறாருங்க... படமாத்தூர் கௌரி வல்லப பெரிய உடையத் தேவர் என்று ஒருத்தர் இருக்கிறார். சிவகங்கையை அவரே ஆளவேண்டும் என்ற பேராசை அவருக்கு !

பிளாக் :—அப்படியா, கறுத்தா! நீ சென்று அவரை, காளையார் கோவில் காட்டில் பாதை அமைத்துக் கொண்டிருக்கும் கர்னல் அக்னியுவிடம் அழைத்துப் போ... இதோ... உன் செலவுக்குப் பணம் இருநூறு பொன்...

(பொன்னைப் பெற்றுக்கொண்டு, மலர்ந்த முகத்துடன் செல்கிறான், கறுத்தான்.)

பிளாக் :—(தொண்டைமானை நோக்கி) மலை பிளவு படுகிறது மிஸ்டர் புதுக்கோட்டை! இனி சுலபத்தில் தூள் தூளாக்கி விடலாம்.

— திரை —

காட்சி 23

29 ஆகஸ்டு 1801

காளையார் கோவில் காடு

கம்பெனி முகாம்.

(கர்னல் அக்னியு, கர்னல் வெல்ஷ் இருவரும் அமர்ந்துள்ளனர்.)

வெல்ஷ் :—கர்னல், சார்! ஒரு மாத காலமாக முயற்சிக்கிறோம். தினமும் ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் வேலை செய்தும்கூட நான்கு மைல் தூரம் காட்டை அழித்து பாதைபோட முடியவில்லையே! காளையார் கோவில் இன்னும் நான்கு மைல் இருக்கிறதே!

அக்னியு :—ஆமாம்! இந்தக் காட்டின் மத்தியில் ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு யுகமாக இருக்கிறது.

வெல்ஷ் :—நேற்றிரவுகூட மறவர் ஆட்கள் மூன்று கூடாரங்களைக் கொளுத்திவிட்டார்கள். இன்று காலை தண்ணீர் குடிப்பதற்கு ஓடைப்பக்கம் சென்ற முந்நூறு வீரர்கள் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. தேடிப் பார்ப்பதற்கு இரண்டு தளபதிகளை அனுப்பினேன். அவர்கள் காணமற்போனவர்களின் முப்பது தலைகளையும், ஐம்பது முண்டங்களையும் கொண்டுவந்தார்கள்.

அக்நியு :—உஸ்... அதையெல்லாம் என் காதில் போட்டு, என்னை வேறு குழப்பத்திற்கு ஆளாக்காதீர்கள். காட்டை அழித்து பாதை போடுவதும், காளையார் கோவிலைப் பிடித்து மருது பாண்டியரைக் கைது செய்வதும் கனவிலும் முடியாத காரியங்கள்...

வெல்ஷ் :—நமது படையிலும் பலத்த நஷ்டம். இரத்தபேதியாலும் வயிற்றுப் போக்காலும் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே போகிறது.

அக்நியு :...ரோடு போடுவதை நாளையோடு நிறுத்திவிடலாம். இது பற்றிக் கவர்னருக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன்.

(எழுதிய கடிதத்தைப் படிக்கிறான்.)

"காளையார் கோவிலைச் சுற்றி முப்பது கல் விஸ்தீரணத்திற்கு அடர்ந்த காடு. ஆகாயமளாவி நிற்கும் மரங்களை அழித்து சிறு வயலிலிருந்து போடப்பட்ட பாதையின் முயற்சி நாளையோடு கைவிடப்படும். காரணம்... கம்பெனிப் படையில் ஏராளமான நஷ்டம். எதிரிகள் இரவு நேரங்களில் திடீர் திடீரென்று தாக்கித் தொல்லை தருகின்றனர். உயர்ந்த மரங்களிலிருந்தும், அடர்ந்த புதர்களிலிருந்தும் தீப்பந்தங்கள் பறந்து வருகின்றன. எதிரிகள் எந்த இடத்தில் மறைந்து கொண்டு, தீப்பந்தங்களையும் கவண்கற்களையும் எறிகிறார்கள் என்றே தெரியவில்லை. திரும்பத்திரும்ப ஏற்பட்ட தோல்வியால் நம் படைவீரர்கள் சோர்வடைந்து விட்டனர்.

"புரட்சிக்காரர்களை அடக்கி வெற்றி பெறுவோம் என்று எதிர்பார்க்க முடியவில்லை. ஆகவே, நாளை ஒக்கூர் அருகில் உள்ள சோழபுரம் செல்ல முடிவு கட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது......"

அக்நியு :—செய்தி போதுமா, மிஸ்டர் வெல்ஷ் !

வெல்ஷ் :—போதும். ஆனால், இதை அனுப்புவது எப்படி? இதற்கு முன்பு அனுப்பிய செய்திகளும் போய்ச் சேராத வண்ணம் புரட்சிக்காரர்கள் வழியில் மடக்கிவிட்டனர்.

அக்நியு :—இப்போது தக்க ஆளாகப் பார்த்து அனுப்புவோம்!

(படமாத்தூர் உடையத் தேவன், அவன் தமையன், ஒரு வேதியன் ஆகிய மூவரையும் கறுத்தான் அழைத்து வருகிறான். ஒருவர்க்

கொருவர் அறிமுகம் செய்து கொள்கின்றனர்.)

கறுத்தான் :—இவர் படமாத்தூர் கௌரிவல்லப பெரிய உடையத் தேவர்...!

தமையன் :—நான் அவருடைய அண்ணன் !

அக்நியு :—இவர் யார்? வேடிக்கையான மனிதராக இருக்கிறாரே?

தேவர் :—எங்கள் ஊர் புரோகிதர் !

வெல்ஷ் :—எங்கே வந்தீர்கள் ?

கறுத் :—கர்னல் பிளாக்பர்ன் அனுப்பிவைத்தார். இதோ... தேவருக்கு சிவகங்கைச் சீமையில் பங்கு உண்டு. ஆனால், மருது பாண்டியர் இவருக்கு ஜமீனில் பாகமே இல்லையென்று மறுக்கின்றனர்.

அக்நியு :—(வேதியரைப் பார்த்து) உண்மையாகவா...?

வேதியர் :—அதென்ன, அப்படிக் கேக்கறேள் ? நான் எப்போதும் பொய்யே சொல்றதில்லே. முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், கின்னரர், கிம்புருடர், சித்த வித்தியாதரர் இவா சாட்சியா சொல்றேன்.

தேவர் :—துரையவர்கள் மனம் வைத்து நீதி வழங்க வேண்டும். மருதரசர்களுக்கு என் அத்தை இந்த ஜமீனை இனாமாகக் கொடுத்துவிட்டாள்...

வெல்ஷ் :—அப்போது முத்து வடுகநாத உடையணத் தேவர் உமக்குச் சொந்தமா ?

தேவர் :—ஆமாம். எங்கள் பெரியப்பாவின் சித்தி வயிற்றுப் பேரனின்...

தமையன் :—சித்தப்பாவுக்குத் தங்கை மகள் ஒருத்தி...

வேதியர் :—அவளுடைய மாமன் மகளுடைய இரண்டாவது மாமியாரின் நாத்தனாருடைய கொழுந்தியாருக்கு தூரத்து உறவு வேலு நாச்சி... வேலு நாச்சியே நம்ம தேவருக்குச் சொந்தம்னா, செத்துப்போன முத்துவடுகநாதரும் சொந்தமுன்னோ...? அந்தப் பாத்யதை வைச்சுப் பார்த்தா நம்ம தேவர்வாளுக்கு ஆயிரத்து ஐநூத்து ஐம்பது சதுர மைல் விஸ்தீரணம் உள்ள சிவகங்கைச் சீமையிலே முக்காலே அரைக்காலே மூன்று

வீசத்து இரண்டு மாகாணியே காணி அரைக்காணி பாகம் சொந்தம் ஆறது.

கறுத் :—உரிமையை உதறித் தள்ளிவிட தேவருக்கு இஷ்டமில்லேங்க.

தேவர் :—நீங்க ஏழைமேல் தயவு வைத்து ஒரு உத்திரவு போட்டால் போதும்.

(அக்நியு பொருள் பொதிந்த பார்வை ஒன்றை வெல்ஷை நோக்கிச் செலுத்துகிறான். குறிப்பறிந்த...)

வெல்ஷ் :—இது அநியாயம், மிஸ்டர் தேவர்! உங்களுக்குச் சேர வேண்டிய சொத்துக்களை விட்டுவிட்டு வெறுங்கையுடன் இருப்பது உமக்கு அவமானமாக இல்லே?

வேதியர் :—என்ன பண்றது? தேவர்வாளுக்கு ஏழரை ஆண்டு அஷ்டமத்திலே சனி பார்வையிருந்தது. இப்போதான் சிம்ம லக்கினத்தில் சுக்கிர திசை ஆரம்பிச்சிருக்கு... புதனுடைய நேரிடையான பார்வை (வியாழனுக் கடுத்த வெள்ளிமீது விழுந்து...

அக்நியு :—ஷட்டப், மிஸ்டர் ஐயர்! நாங்கள் தேவரைக் கேட்கிறோம்.

தேவர் :—என் வாழ்வே தங்கள் கையில்தான் இருக்கிறது.

வேதியர் :—சிவகங்கை சிம்மாசனத்திலே அமர வேண்டியவர்...

கறுத் :—கால் ஒடிந்து ஆட்டங்கண்டுபோன நாற்காலியில் உட்காருகிறார்!

வெல்ஷ் :—பரிதாபம்...

வேதியர் :—அழகான அரச முடி சூட வேண்டிய தலையில்...

கறுத் :—அழுக்கடைந்த எட்டுமுழ வேட்டியைத் தலைப்பாகையாக சுற்றிக்கொண்டிருக்கிறார், சார்!

அக்நியு :—பரிதாபம்...! பரிதாபம்...!!

தமையன் :—என் தம்பி பட்டத்து யானைமீது பவனி வர வேண்டியவன்...

கறுத் :—நல்ல செருப்புகூட இல்லாமல், காலால் நடந்து வந்தாருங்க...!

வேதியர் :—(கறுத்தானை நோக்கி எரிச்சலுடன்) மற்றவா மட்டும் கையால் நடக்கிறுளோ...நீர் சும்மா இருங்காணும்! (கர்னலைப் பார்த்து பணிவுடன்) ஹி... ஹி... துரைவாளுக்கு ஒண்ணு மட்டும் சொல்றேன்! முறுக்கேறி நிற்க வேண்டிய தேவருடைய மீசையைப் பாருங்கோ... அவமானத்தைச் சகிக்க முடியாம தொங்கிப் போயிடுச்சு! துரைவாள் கருணை பண்ணணும்!

வெல்ஷ் :—அதெல்லாம் சரி, மிஸ்டர்! நாங்கள் அவருக்கு உதவி செய்கிறோம்; தேவரையே மன்னராக்குகிறோம். ஆனால், அவர் எங்களுக்கு முழு மனத்தோடு உதவ வேண்டுமே...

கறுத் :—உதவுவாருங்க... கம்பெனிக்கு நாயா உழைப்பாருங்க...

வேதியர் :—வேணும்னு நானும் ஒழைக்கிறேன்!

கறுத் :—(வேதியரை நோக்கி எரிச்சலுடன்) யோவ்! நீ சும்மா இருய்யா! நீ வேறே குறுக்க குறுக்க குண்டு பாயறே! (கர்னலைப் பார்த்து கனிவுடன்) எப்படியாவது மனசு வையுங்க, சார்!

தமையன் :—எங்களுக்கு சிவகங்கை, காளையார் கோவில் முதலிய இடங்களின் இரகசியப் பாசறைகள் எல்லாம் தெரியும்.

தேவர் :—அந்த உளவுகளை உங்களுக்குக் கூறுகிறோம்!

அக்நியு :—ஆல் ரைட், மிஸ்டர் தேவர்! நாங்கள் சட்ட பூர்வமாக சிவகங்கைக்கு உம்மையே அரசராக்குகிறோம். பட்டாபிஷேகத்தை சோமவாரத்தில் வைத்துக் கொள்ளலாம்.

தேவர் :—தங்கள் சித்தம்!

வேதியர் :—அடிமைகளின் பாக்கியம்!

(கை கூப்புகின்றனர் தேவரும் அவர் ஆட்களும்.)

வெல்ஷ் :—உங்கள் நன்றியின் அறிகுறியாக ஒரு உதவி செய்யுங்கள் பார்க்கலாம்.

தேவர் :—தாராளமாகச் செய்கிறோம்!

அக்நியு :—இது சென்னைக்கு எழுதப்பட்ட கடிதம். இதை புதுக் கோட்டையிலிருக்கும் கர்னல் பிளாக்பர்னிடம் சேர்த்துவிட வேண்டும். செய்தியைச் சேர்ப்பவருக்கு ஆறு வராகன் பணம் தருகிறோம்.

ஒரு மறவன் :—(வந்து) நான் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்.

வெல்ஷ் :— *கறுத்தான்! இவனை உன்னுடன் அழைத்துச்செல்; அங்கு கர்னல் கொடுக்கும் பதிலை இவன் மூலமாகவே அனுப்பு.*

கறுத் :— *சரி... சார்!*

(கறுத்தானும் மறவனும் கடிதத்துடன் செல்கின்றனர்.)

அக்ரியு :— *மிஸ்டர் வெல்ஷ்! கம்பெனிப்பட்டாளம் நாளைக்கு சோழவரம் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.*

— திரை —

காட்சி 24

காளையார் கோயில் காடு.

(கறுத்தானும், கடிதம் கொண்டு செல்லும் மறவனும் ஈட்டிகளுடன் வருகின்றனர். எங்கேயோ தூரத்திலிருந்து ஒரு குரல் கேட்கிறது.)

குரல் :— *நில்லுங்கள்...!*

(திகைப்புடன் நின்றுவிட்டு, சற்று வேகத்துடன் நடக்கின்றனர்.)

குரல் :— *யாரோ செல்லும் சத்தம் கேட்கிறது. யார் அது செல்வது? நில்லுங்கள் !!*

(இருவரும் ஓடுகின்றனர். எதிரில் வந்த முத்தய்யன் அவர்களைத் தடுத்து நிறுத்துகிறான்.)

முத்தய்யன் :— *நிற்கச் சொன்னால் ஓடுகிறீர்களே...*

கறுத்தான் :— *அது எங்கள் இஷ்டம்...*

முத்தய்யன் :— *அது நீ சொல்லாமலே புரிகிறது!*

கறுத்தான் :— *வாட்... வாட்...! என்னையே எதிர்த்துப் பேச ஆரம்பிச்சுட்டாயா? ஏய்.....நான் இப்போது யார் தெரியுமா... பறங்கித் துரைகளோட அந்தரங்கக் காரியதரிசி........*

முத்தய்யன் :— *அயோக்கியப் பய... எனக்கு நன்ருக தெரியுமே... நீ பறங்கிக்காரனுக பாதந் தாங்கி.,.... உண்ட வீட்டையே இரண்டகம் பண்ணும் நாசகாலன்........ புதுக்கோட்டை*

துரோகியின் வளர்ப்புப் பிள்ளை...... அடிமை மனப்பான்மையின் முன்னோடி.........

கறுத்தான்:—இவரு ரொம்ப நன்றியுள்ள ஜென்மம்...... அடபிழைக்கத் தெரியாதவனே ! முடிஞ்சுதா உன் ஒப்பாரி.........

முத்தய்யன்:—இல்லே...... விசயத்தையே இப்பதான் ஆரம்பிக்கப் போகிறேன். உண்மையைச் சொல்லுங்க... இல்லேன்னு இந்தக் கட்டாரிக்குப் பதில் சொல்லியாகணும்......

கறுத்தான்:—வாட்.........

முத்தய்யன்:—கம்பெனி முகாமிலேயிருந்து கடிதம் தானே கொண்டு போகிறீர்கள்.........

கறுத்தான்:—முத்தையா ! என் முன்கோபத்தைக் கிளறுதே......

முத்தய்யன்:—துள்ளும் மாடு பொதி சுமக்காது, தம்பி !

கறுத்தான்:—ஆ.....!

(ஓங்கிக் குத்துகிறான். மறவன் ஈட்டியைச் சுழற்றி முத்தய்யனை அடிக்கிறான். அது தவறிப்போய், கறுத்தான் மண்டை மீது விழுகிறது. கறுத்தான் கீழே சாய்கிறான். முத்தய்யன் தன் மீது பாய்ந்துவந்த மறவன் மார்பில் கட்டாரியால் குத்தி அவனை வீழ்த்தி, கடிதத்தைப் பறித்துக்கொண்டு திரும்பும் போது, கறுத்தான், அவன் காலை இடறி விடுகிறான். முத்தய்யன் கீழே விழ, அவன் மார்பில் ஈட்டியைப் பாய்ச்சிவிட்டு கடிதத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடுகிறான், கறுத்தான். சற்று நேரங்கழித்து முத்தய்யன் மார்பில் தாங்கிய ஈட்டியுடன் தள்ளாடித் தள்ளாடி நகர்கிறான். பின்னணியில் சோகம் இழைகிறது.)

—திரை—

(தொடரும்.)

நாவும் பேறுவும்

[கா. சி. கசேந்திரன்.]

மணிமுடி தரித்தாண்ட மன்னரெல்லாம் மறைந்து வருகிறார்கள்; உலகெங்கும் மக்களாட்சி பரவி வருகிறது. எனவே எதிர்காலத்தில் நாட்டை ஆளப்போகின்றவை செங்கோலும் சிங்காதனமும் அல்ல என்ற கொள்கை பிறந்து, நல்லறிஞர்களின் நாவும் பேறுவும்தாம் என்ற கோட்பாடு நிலைபெற்று வருகிறது.

வையகத்தில் வாழும் மக்கள் உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைப் பெற்று விடுவதால் மட்டுமே, சமுதாயத்தில் முழுக்க முழுக்க மன நிறைவு அடைந்து விடுவதில்லை. அவர்களை நல்ல முறையில் நடாத்திச்செல்ல திறன் மிக்க ஆட்சியாளர்களும், திட்டம் வகுத்துத்தரும் சான்றோர்களும் தேவைப்படுகிறார்கள். உலகம் குழப்ப நிலையிலிருந்து விலகி, அமைதியுடன் வாழ அத்தகைய உயர்ந்தோரின் நாவையும் பேறுவையுமே எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கிறது.

உண்மையான மக்களாட்சி (Democracy) திகழும் நாட்டில் நாவும் பேறுவும் தலையாய இடங்களைப் பெறுகின்றன. பண்டைக் கிரேக்கம் இந்த இரண்டையும் கண்ணேபோற் போற்றி வந்திருக்கிறது.

அன்று வாழ்ந்த சொல்வலன் டெமாஸ்தனீசின் நாவசைந்த போது, ஏதன்சு நகரமே வளைந்து கொடுத்தது; "புறப்படுங்கள், பிலிப் மன்னனை எதிர்த்துப் போராடுங்கள்" என்று அன்று டெமாஸ்தனீசு ஆற்றிய சொற்பெருக்கு, ஏதன்சு நகரத்து இளைஞர்களின் இதய நாளங்களை முறுக்கேறச் செய்து, மாபெரும் போருக்கு வழி கோலியது. ஆகவே இன்றும் தலைசிறந்த பேச்சுக்கு ஆங்கிலத்தில் 'பிலிப்பிக்' என்று சொல்கிறார்கள்!

இதேபோல் சாக்ரடீசின் நாவிலே தவழ்ந்துவந்த புத்தறிவுக் கருத்துக்கள் கிரேக்கத்திற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே விழிப்புணர்ச்சி யூட்டுவனவாகத் திகழ்ந்தன.

அதே முறையில் ஈட்டி முனைகள் தோற்ற இடங்களில் கூட எழுத்துலக வேந்தர்களின் பேறு முனைகள் வெற்றி சூடியிருக்கின்றன. கி. பி. 1789-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 14-ஆம் நாள் பிரான்சு நாட்டிலுள்ள 'பாஸ்டீல்' என்னும் சிறை தூள்தூளாக்கப் பட்டது; ஆனால் இந்த மாபெரும் சிறையைத் தகர்த்தெறிந்த கட்டாரிகள் எவை தெரியுமா? மாண்டேகு (Montesquieu), வால்டேர் (Voltaire), ரூசோ (Rousseau), திதேராட் (Diderot), டி-ஆலம்பர்ட் (D'Alembert) ஆகிய எழுத்துலகச் சிற்பி

களின் கைகளில் திகழ்ந்த பேனு முனைகளின் கூர்மைதான் இச் செயலைச் சாதித்தது என்பதை உலகம் நன்கு அறியும்.

எனவே வில்லும் வேலும் சாதிக்காதவற்றையெல்லாம்கூடச் சொல்லும் எழுத்தும் சாதித்திருக்கின்றன.

இதனுற்ருன் சொல்லின் திறத்தை நன்குஉணர்ந்த வள்ளுவனர்,

விரைந்து தொழில் கேட்கும்
ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்

என்று அன்றே கூறிச் சென்ருர்.

நாவின் முனையும் பேனுவின் முனையும்தாம் உலகத்தின் தலைவிதியையே மாற்றியமைத்திருக்கின்றன என்பதற்கு உலக வரலாற்றிலே எத்தனையோ சான்றுகள் காணக்கிடக்கின்றன. பொருளியல் துறையில் கார்ல் மார்க்சின் பேனுமுனை கண்ட தத்துவங்கள் பொதுவுடைமைச் சமுதாயத்திற்கே பாதையமைத்துக் கொடுத்தன. ருஷ்ய நாட்டில் ஆண்ட பேரரசன் பீட்டரை எதிர்காலம் மறந்துவிடலாம்; ஆனல் மார்க்சின் பேனுமுனை விட்டுச்சென்ற கருத்துக்கள் அவனை என்றென்றும் உயிருடன் வாழவைக்கும்!

பிரான்சு நாட்டிலே கொடி கட்டி வாழ்ந்த நெப்போலியன் எதிர்காலத்தின் கண்களுக்குத் தெரியாமல் போகலாம்; ஆனல் புத்தம் புதுக் கருத்துக்களைப் பேனுவால் விதைத்துச் சென்ற எமிலிஜோலாவை யாரால் மறந்துவிடமுடியும்?

ஷேக்ஸ்பியரின் 'ஜூலியஸ் சீசரை'ப் படிப்போர், அவனின் பேராண்மையை மறந்துவிடலாம்; ஆனல் அந்தோணியின் உயிர் செறிந்த சொல்லாற்றலை எப்படி மறந்துவிடமுடியும்?

கலிங்கக் களம் கண்ட கருணுகரத் தொண்டைமானைக்கூட மறந்துவிடலாம்; ஆனல் கலிங்கத்துப் பரணிபாடிய செயங்கொண்டானை நம்மால் மறக்க முடிவதில்லையே!

நாவையும் பேனுவையும் ஒப்பிட்டால் குறுகிய நேரத்தில் பெருத்தவிளைவை ஏற்படுத்தவல்லது நாவென்று கூறமுடியும். நாட்டிலே காட்டுத்தீயைப் பரப்பவும் நாவுக்கு ஆற்றல் உண்டு; எரியும் தீயை அணைக்கவும் அதற்குத் திறன் உண்டு.

பேனு, நிலையான கருத்துக்களைப் பல்லாயிரக் கணக்கான மக்களின் நெஞ்சங்களில் பதியவைக்கும் பேராற்றல் வாய்ந்தது.

இன்று நம் நாட்டில் நாவலர்களும், பேனு வல்லுநர்களும் மிக மிகத் தேவைப்படுகிருர்கள். நூற்றுக்கு எண்பது விழுக்காட்டிற்கு மேல் படிப்பற்ருேர் உள்ள நம் நாட்டில் நாநலம் வாய்ந்தோர் உடனடியாகத் தேவைப்படுகிருர்கள். குறிப்பாகத் தமிழகத்தில் பிற்போக்குக் கொள்கைகளாலும், சாதி, மதப் பிரிவுகளாலும் அடிமைகளாக்கப்பட்டு எல்லாத்துறை

யிலும் பின்னணியில் கிடக்கும் மக்களை விழிப்புணர்த்த, சான்றோர் பலரின் நாவும் பேனாவும் பயன்படுத்தப்படவேண்டும். இத்துறையில் அண்மைக்காலத்தில் தென்னகத்தில் தோன்றிய பகுத்தறிவியக்கங்கள் சொல்லாற்றலையும் எழுத்தாற்றலையும் துணையாயாகக்கொண்டு குறிப்பிடத் தகுமளவிற்கு மாபெரும் வெற்றி கண்டிருக்கின்றன.

அதே நேரத்தில் நாவும் பேனாவும் நல்லமுறையில் பயன்படுத்தப்படவேண்டும் என்று ஆன்றோர் வற்புறுத்தி வருகிறார்கள். நரம்புகள் திரண்டு வலிவுபெற்ற காரணத்தாலேயே நாவை எத்துறையிலும் வளைத்துப் பேசிவிடக்கூடாது; நாடு வாழ்வும் நலிவு தீரவும், வேண்டிய திட்டங்களைப் பரப்புவதற்குமே நா பயன்படவேண்டும்.

மையும் பேனாவும் இருக்கும் காரணத்தாலேயே எதையும் எழுதிவிடக்கூடாது; எல்லோரும் இன்புற்றுவாழ ஏற்றனவற்றையே எழுதிக் காட்டுதல் வேண்டும்.

கத்தியை அறுவைச் சிகிச்சைக்கும் பயன்படுத்தலாம்; ஒருவனின் ஆருயிரைப் போக்கவும் பயன்படுத்தலாம். எதுவும் அதைப் பிடிப்பவனின் கையைப் பொறுத்தே இருக்கின்றது.

கத்திபிடித்தவனெல்லாம் மருத்துவனாகி விடுவதில்லை; பேனா பிடித்தவனெல்லாம் எழுத்தாளனாகி விடமுடியாது. இறைச்சி விற்பவனின் கையில் உள்ள கத்தியைப்போன்று, எத்தனையோ தன்னல வெறியர்கள் பேனாவைப் பயன் படுத்துகிறார்கள்; இச்செயல் சமுதாயத்திற்குக் கேடு தருவதாகும்.

எனவே நாவையும் பேனாவையும் கொண்டிருப்போர் நெஞ்சத்திலே தூய்மையையும் நேர்மையையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

எது எப்படியிருந்தாலும் எதிர்காலத்தில் உலகை ஆட்டிப் படைக்கப்போகும் மிகமிக ஆற்றல் பெற்ற சக்திகள் நா, பேனா இவற்றில்தாம் பிறக்கப் போகின்றன. இந்தப் பேருண்மையை நன்கு புரிந்து கொண்டு, சிந்தித்துச் செயலாற்றத் தொடங்கினால் நம் பல்கலைக் கழகத்தினின்றும் எத்தனையோ 'சிசரோ'க்களும் 'பெர்னாட்ஷா'க்களும் வெளிவர முடியும்; மாணவ நண்பர்கள் செயல்படுவார்களா?

—பச்சையப்பன் கல்லூரி இதழ்

:: செய்தித் தந்தை ::

[அ. அப்துல் காசிம்]

பண்டைய நாட்களில் நவீன வசதிகள் ஏற்படாததின் நிமித்தமாக ஒரு இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி, பிறிதோர் இடத்திற்கு நீண்ட நாட்களுக்குப் பின்னரே தெரிய வந்தது. அந்நாட்களில் முடியலங்கரிக்கும் இடங்களும், உணவு விடுதிகளும், கிராமச் சாவடிகளும், செய்தி நிலையங்களாக விளங்கின. ஒரு ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குக் கால் நடையாகச் செல்பவன் உணவருந்தவோ, களைப்பாறவோ, உணவு விடுதி, கிராமச்சாவடி முதலிய இடங்களில் தங்குவான். புது முகத்தைக் கண்ட மக்கள், "ஐயாவிற்கு எந்த ஊர்? ஊர்ப் பக்கம் என்ன விசேடம்?" என்று கேட்பார்கள். "நமக்கு வெகு தூரமுங்க. எங்கள் ஊரிலே..." என்று செய்திகளை அடுக்கிக்கொண்டே செல்வார். அதைக் கேட்கும் மக்கள் 'அப்படியா' 'அப்படியா சங்கதி' என்று ஆவலுடன் கேட்பார்கள். அதைக் கேட்ட மக்கள் தமக்குத் தெரிந்தவர்களுக்குக் கூற அச்செய்தி காட்டுத்தீ போல் பரவி விடும். இவ்வாறு நம் முன்னோர்கள் செய்திகளை அறிந்து வந்தனர்.

ஆனால், இன்று அகில உலகத்திலும் நடைபெறும் செய்திகளை உடனுக்குடன் படித்துப் பரவசமடைகிறோம். நேற்று நடைபெற்ற எகிப்து யுத்தச் செய்திகளை, ஈடன் ஜெமெய்கா தீவிற்கு ஓய்வெடுக்கச் சென்றதை, ஜான் சென்னை மாகாணக் கவர்னராக நியமிக்கப்பட்டதை இன்று கண் விழித்தவுடன் காணுவிட்டால் நம் மனதிலே நிறைவு ஏற்படுவதில்லை. எகிப்திலே நடைபெற்ற நிகழ்ச்சி, இலண்டனிலே வெளியிடப்பட்ட செய்தி, சென்னையிலே கூறப்பட்ட செய்தி, யாரால்; எப்படி விடியுமுன் அறிய முடிகிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா?

பத்திரிகை படிக்கும் ஒவ்வொரு வாசகரும் "ராய்ட்டர்" என்ற வார்த்தையைப் படியாதவர்கள் இருக்க முடியாது. அது போல, "ராயட்டர் செய்திகள்" என்று எழுதப்படாத பத்திரிகையும் இருக்க முடியாது. பத்திரிகை உலகிலே ராய்ட்டர் செய்திக்கு மிக முக்கியத்துவம் உண்டு. தமிழ், ஆங்கில தினசரி ஏடுகளில் செய்திகளின் அடியில் "ராய்ட்டர்" என எழுதப்பட்டிருக்கும். "ராய்ட்டர்" என்றால் என்ன? யார்?—என்பதை விளக்கவே இக்கட்டுரை எழுந்தது.

ராய்ட்டர் என்ற ஜெர்மானியர் 1816-ம் ஆண்டு ஜெர்மன் நாட்டிலுள்ள கேசல் என்ற நகரில் பிறந்தார். இளம் வயதிலேயே தந்தையை இழந்த காரணத்தால்

ஆதரிக்க ஆளின்றி, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, வாழ வழியின்றி வறுமையில் வாடினார். வறுமை அவரை வாட்டி வதைத்தபோதிலும், மனந்தளரவில்லை. முழங்காலைக் கட்டி மூலையில் முடங்கிக்கொண்டிருக்கவில்லை. விதியின் சதி என்று வீட்டில் இருந்துவிடவில்லை. வறுமைப் பிணியைத் தீர்த்துக் கட்டத் திட்டம் தீட்டினார். வாழ்க்கையை வளப்படுத்த வழிகள் என்ன?—என சிந்தித்தார். அவ்வளவுதான; சிந்தனை என்ற சிறகையடித்துப் பறந்தார். சூழ் நிலையும் சந்தர்ப்பமும் அவருடைய சிந்தனையுடன் சேர்ந்து உறுதுணை செய்தது. நாலா பக்கமும் நண்பர்கள் பலர் ஏற்பட்டனர். அவர்களின் துணை கொண்டு முதலில் ஒரு புத்தகக் கடையில் பங்காளியாகி, தனது தொழிலில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். அதனால் நல்ல வருவாய் கிடைத்து வந்தது.

அச் சமயத்தில் வணிகர்களும் வங்கியர்களும் அவரவர் தொழில் சம்பந்தப்பட்ட செய்திகளை ஒருவருவருக் கொருவர் முந்தித் தெரிந்துகொள்ள முற்பட்ட செய்தியைக் கேள்வியுற்றார். உடனே, அவரது கவனம் செய்திகளைச் சேகரித்துக் கொடுப்பதில் திரும்பியது. எந்நேரமும் அவரது எண்ணம் இத்தொழிலில் ஈடுபட்டது.

அவர் எண்ணிய எண்ணம் ஈடேற வியாபாரத் தலைநகராகத் திகழ்ந்த பிரஸ்ஸல்ஸ் என்ற நகரில் ஒரு நண்பரை அணுகி அன்றுடச் செய்திகளைப் புறுக்களின் மூலமாக உடனுக்குடன் அனுப்ப ஏற்பாடு செய்தார். அவ்வேற்பாட்டின் படி அன்று நடைமுறையில் இருந்த தபால் நிலையங்கள் கொடுத்த செய்திகளை விட ராய்ட்டரின் செய்திகள் மூன்று மணி நேரம் முன்னால் கிடைத்தன. அதனால் வியாபார உலகில் ராய்ட்டரின் செய்திக்குச் செல்வாக்கும் புகழும் ஏற்பட்டது.

வெற்றி மேல் வெற்றி கண்ட ராய்ட்டர் செய்தி வர்த்தகத்தை இன்னும் விரிவுபடுத்த முயன்றார். இலண்டன் மாநகரிலிருந்து செய்திகளை முக்கியமான வியாபார நகரங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார். ஆம்ஸ்டர்டாம், பெர்லின், வியன்னு முதலிய நகரங்களில் நம்பிக்கையும் சுறுசுறுப்பும் வாய்ந்த நிருபர்களை நியமித்தார். இந்தியா, பர்மா, சீனு, ஜப்பான் போன்ற தூரக் கிழக்கு நாடுகளிலும் நிருபர்களை ஏற்படுத்தினர். அவர்கள் அந்நாட்டுச் செய்திகளைச் சூயஸ் கால்வாய் மூலம் செல்லும் கப்பலில் அனுப்பி வைத்தனர். அங்கிருந்து அச்செய்திகளை ராய்ட்டர் தந்தி மூலம் இலண்டனுக்குத் தெரியப்படுத்தினர்.

1858-ம் ஆண்டிலிருந்து வியாபாரச் செய்திகளுடன், பொது வான செய்திகளும் அனுப்பி வைக்குமாறு தமது நிருபர்களுக்குக் கட்டளையிட்டார். அதன்படி

அவர்கள் அந்தந்த நாடுகளில் நடைபெற்ற சமூக, அரசியல், பொருளாதாரச் செய்திகளை அனுப்பி வைத்தனர். அச்செய்திகளுக்கு ஆங்கில ஏடுகளில் கிராக்கி ஏற்பட்டுவந்தது.

ஒரு சமயம், வான மண்டலத்தில் யுத்த மேகங்கள் கிளம்பின. ராய்ட்டர் பக்கம் அதிர்ஷ்டம் திரும்பியது. அவர் எதிர்பார்த்த வண்ணம் பிராங்கோ—ஆஸ்திரியப் போர் மூண்டது. ராய்ட்டர் அந்த ராணுவ முகாம்களுக்கு நிருபர்களை ஓடோடச் செய்து திரட்டிய யுத்தச் செய்திகள் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டன.

பின் அமெரிக்காவில் 1861-ம் ஆண்டு நடைபெற்ற பயங்கரப் போர், அமெரிக்காவின் அண்ணல் அபிரகாம் லிங்கன் கொலை செய்யப்பட்டது போன்ற செய்திகளைச் சுடச் சுட மக்களுக்குத் துரிதமாகக் கிடைக்க ஏற்பாடு செய்தார்.

பிறகு, உலகின் மூலை முடுக்கெல்லாம் நிருபர்களை அனுப்பி செய்திகளை வரவழைத்தார் ஆங்காங்கு உள்ள செய்தி நிலையங்களுடன் நட்பு கொண்டார். அவர்களிடமிருந்து செய்திகளைத் தெரிந்து இன்னும் தனது பணியில் வெற்றியைத் தேடிக்கொண்டார்.

தனக்குப் பின்னும் இத்தொழில் குன்றாது நடைபெற வேண்டுமென ஆவல் கொண்டார். தான் ஏற்றி வைத்த விளக்கு என்றும் எரியும் நந்தா விளக்காக விளங்கவேண்டுமென எண்ணினார். அதற்காக செய்தி 'நிலையக் கூட்டுக் கம்பெனி' ஒன்றைத் தோற்றுவித்தார். அந்தக் கம்பெனியின் துணையால் இன்று நாட்டிலே நடைபெறும் அத்தனை பத்திரிகைகளும், செய்திகளை உடனுக்குடன் தெரிந்து, டெலிபிரிண்டர் மூலமாக சில மணி நேரத்தில் அச்செய்திகளை நம் கண்முன்னே காட்சி யளிக்கச் செய்கின்றன. அக்கம்பெனி இன்றுவரை தன்னுடைய பணியைத் திறம்பட நடத்தி வருவதை நாம் பார்க்கிறோம்.

உழைப்பால் உயர்ந்த உத்தமர்களின் வரிசையிலே முதலிடம் பெற்று விளங்கினார் ராய்ட்டர். விடா முயற்சியாலும், சலியா உழைப்பாலும் உயர்ந்து, நாட்டு மக்களுக்கு நல்லதோர் பணியாற்றிய ராய்ட்டருக்கு "பாரன்" என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தான் அந்நாட்டு மன்னவன்.

அத்தகைய பட்டத்தைப் பெற்ற ராய்ட்டர் 1899-ம் ஆண்டு இயற்கை எய்தினார். அவரது பணியை அவரது மகன் ஏற்று திறம்பட நடத்தி வருகிறார். ராய்ட்டர் நம்மிடையே இல்லாவிட்டாலும், அவர் பெயர் இறக்கவில்லை; அவர் புகழ் குன்றவில்லை; அவரது புகழேணி சரிந்து விடவில்லை. அவர் ஆற்றிய தொண்டு என்றென்றும்

மறக்க முடியாதது. பத்திரிகையைக் கையிலெடுக்கும்பொழுதெல்லாம் ராய்ட்டரின் உருவம் நம் கண் முன்னே காட்சியளிக்கிறது.

இன்று எகிப்திலே மீண்டும் போர் என்றாலோ, சூயசுக் கால்வாயில் மீண்டும் போக்கு வரத்து ஆரம்பமாகிவிட்டது என்றாலோ, ஈடனுக்குப் பதில் மக்மில்லன் ... பட்லர் பிரதமராகிவிட்டார் என்றாலோ, ராய்ட்டரின் செய்தி நிலையம் அவற்றை மூலை முடுக்கெல்லாம் முரசொலிக்கின்றது. ஒவ்வொரு செய்தியும், "ராய்ட்டர், ராய்ட்டர், ராய்ட்டர்" என அலறிக்கொண்டு மக்களின் மன்றத்திலே காட்சி யளிக்கின்றன.

இவ்வாறு அரிய பணியாற்றி, உழைப்பால் உயர்ந்து, உலக மக்களின் அன்பைக் கவர்ந்த ராய்ட்டருக்கு நாம் ஒவ்வொருவரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர் ஜெர்மனி குடிமகனாக மட்டுமல்லாது, உலகக் குடிமகனாகவும் விளங்கினார்; விளங்கிக்கொண்டு வருகிறார்! அவரது வாழ்க்கை நம் மக்களுக்கு வழி காட்டும் ஒளி விளக்காக அமைந்திருக்கிறது.

—"முத்தாரம்"

'ஆரம்பக் கல்வி" ஆபீஸ்,

94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

✻

மாதாந்திரக் கணக்கு
அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-50
ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50
பிராவிடண்ட் பண்டு
கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50
பள்ளியில் பிள்ளைகளைச்
சேர்க்கும் விண்ணப்பத்
தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1–25
வருடாந்திர பிராவிடண்ட்
பண்டு சரிபார்த்தனுப்பும்
பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50
Form of Certificate of Income
வருமான
நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50
தபால் செலவு பிரத்யேகம்

✻

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் அனுப்ப 25 பாரங்களுக்கு தபால் செலவு 14 n. P. 50 பாரங்களுக்கு 26 n.P. 75 பாரங்களுக்கு 41 n. P. 100 பாரங்களுக்கு 50 n. p.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

உண்மை இதுதான்

[டாக்டர் மு. வரதராசன்]

ஒரு முறை சித்தூரை அடுத்த ஒரு சிற்றூர்க்குச் சென்று நண்பர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்தேன். நண்பரோடு இரண்டு நாள் அளவளாவிக் கொண்டிருந்த பிறகு மூன்றும் நாள் அவர் படித்த கல்லூரியைப் பற்றிய பேச்சு வந்தது. அவர் பச்சையப்பன் கல்லூரியில் படித்தவர் என்று அறிந்ததும், அதைப் பற்றிக் கேட்டறிவதில் எனக்கு ஆர்வம் மிகுந்தது. பச்சையப்பன் கல்லூரியின் பெருமையைப் பற்றி அவர் பேசிக்கொண்டே வந்து அவர் படித்த காலத்தில் இருந்த ஆசிரியர்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டே சென்றார். அவர் பி. ஏ. படித்துப் பட்டம் பெற்றவர். இண்டர்மீடியட் வகுப்பிலும் பி. ஏ. வகுப்பிலும் ஆங்கிலம் கற்பித்த ஆசிரியர்களைப் பற்றிக் கூறினார். அவருடைய விருப்பப் பாடமாகிய கணக்குக் கற்பித்த ஆசிரியர்களைக் குறிப்பிட்டுப் புகழ்ந்தார். விஞ்ஞான ஆசிரியர்களைப் பற்றிச் சில குறைகளை எடுத்துச் சுட்டினார். கல்லூரித் தலைவரைப் பற்றியும் குற்றமும் குணமுமாகச் சில சொன்னார். இவ்வாறு முறையாக எல்லாரைப் பற்றிச் சொல்லியும் மொழியாசிரியரைப் பற்றி ஒன்றும் கூறவில்லையே என்று திகைத்து அவரே கூறுவார் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அதற்குள் அவர் பச்சையப்பன் கல்லூரிக்கு அடுத்த உணவு விடுதியைப் பற்றிப் பேச்சை மாற்றத் தொடங்கினார். உடனே நான் என் ஐயத்தைப் போக்கிக்கொள்ள விரைந்தேன்.

“ஆமாங்க; எல்லாரைப் பற்றியும் சொன்னீர்களே! மொழியாசிரியரைப் பற்றி ஒன்றுமே பேசாமல் விட்டுவிட்டீர்களே! நீங்கள் பி.ஏ. படித்தவர் ஆகையால் இண்டர் மீடியட், பி. ஏ. இரண்டிலும் மொழிப் பாடம் விடாமல் இருந்திருக்குமே” என்று கேட்டேன்.

“அதுவா? எனக்கு அவர்களைப் பற்றி அக்கறையே இருப்பதில்லை” என்றார் நண்பர்.

“என்ன இப்படிச் சொல்கின்றீர்களே! இந்தக் காலத்திலா இப்படிப் பேசுவது? உங்களுக்கு இருக்கும் தாய்மொழிப் பற்றுக்கு நீங்கள் இப்படிப் பேசலாமா? அதிலும் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் படித்துவிட்டுத் தமிழாசிரியர்களைப் பற்றி மௌனமாக இருப்பதா?” என்று என் ஆத்திரத்தைக் கொட்டினேன்.

“சொன்னால் வெட்கக் கேடு. நான் தமிழாசிரியர்களிடம் படித்திருந்தால்தானே அவர்களைப்

பற்றிச் சொல்லமுடியும்" என்றார் நண்பர்.

இதைக் கேட்டதும் என்னுடைய திகைப்பு முன்னிலும் மிகுதியாயிற்று. உடனே "நீங்கள் தமிழைத்தானே இரண்டாம் மொழியாக எடுத்துப் படித்தீர்கள்?" என்று கேட்டேன்.

"இல்லை; தெலுங்கை."

"தமிழ்தானே உங்கள் தாய் மொழி?"

"ஆமாம்"

"பின் ஏன் தமிழை விட்டுத் தெலுங்கு படித்தீர்கள்?"

"வேறு வழி இல்லாததால்."

"எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!"

"இதுதான் எங்கள் சொந்த ஊர். இந்த ஊரில் ஐந்தாம் வகுப்பு வரையிலும் படிக்கலாம். அதற்கு மேற்பட்டுத்தான் சித்தூருக்குப் போய்ப் படிக்க வேண்டும். சித்தூரில் தமிழ் படிக்க வழி உண்டு. ஆனால் இந்த ஊர்ப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது வரையில் படிக்க வேண்டுமே. இதில் தமிழ் எழுத்துச் சொல்லிக் கொடுக்க வழியே இல்லை. படித்தால் தெலுங்குதான் படிக்கவேண்டும். இல்லையானால் வீட்டோடு இருக்கவேண்டும். தமிழ் பேசுகிறவர்கள் இந்த ஊரில் மூன்றில் ஒரு பங்கு. அத்தனை பேரும் பேசுவது தமிழ்; படிப்பது தெலுங்கு. ஆகையால் நானும் தெலுங்கு படித்தேன். ஐந்தாவது முடித்த பிறகு சித்தூர்க்குப் போனபோது, அங்கும் வேறுவழி இல்லாமல், தமிழ் தெரியாதபடியால், ஆறுவதில் சேர்ந்தும் தெலுங்கே படித்தேன். சித்தூரில் பத்தாவது வரையில தெலுங்கு படித்த பிறகு சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்த பிறகும் தெலுங்கே மொழிப் பாடமாக எடுத்துத் தெலுங்கு ஆசிரியர்களிடம் படித்தேன். அவர்கள்மேல் குறை சொல்லவில்லை. எனக்கு ஏனோ அந்தப் பாடத்தில் அக்கறை வரவேயில்லை. அதனால் அந்த ஆசிரியர்களிடத்தில் அக்கறை இல்லை. தலைவிதியே என்று வகுப்புகளில் உட்கார்ந்து காலங் கழித்தேன். மார்க்கும் குறைவாகவே வரும். எப்படியோ படித்துப் பட்டம் பெற்றுவிட்டேன். இதுதான் கதை" என்றார்.

நான் பெருமூச்சு விட்டேன்.

* * *

என் தந்தையார்க்குக் கூர்மையான அறிவு உண்டு என்றும், கணக்கில் மிக வல்லவர் என்றும், எல்லாரும் காகிதமும் பென்சிலும் எடுத்துப் போடும் வியாபாரக் கணக்குகளை அவர் வாயாலேயே விரைவில் போட்டு முடிப்பார் என்றும் ஊரில் கிழவர்களும் பேசிக்கொள்வார்கள். "உங்கள் அப்பா இப்படி, அப்படி, இவ்வளவு கெட்டிக்காரர்" என்று

அவர்கள் சொல்லும் போது என் உள்ளம் பூரிக்கும்.

ஆனால் எனக்கு ஒரு பெரிய குறை உண்டு. நான் வெளியூர்க்குச் சென்ற பிறகு அவர் எழுதிய கடிதங்களைப் படிக்கும்போதெல்லாம், என் தந்தையாரைப்போல் தமிழ்க்கொலை செய்கின்றவர் எவரும் இல்லை என்று எண்ணி வருந்துவேன். **ருமசாமி, நண்ராக, இறுக்கிரார்கள், வன்து போநார், எண்று சொண்ணார்** என்றெல்லாம் அவர் கடிதங்களில் எழுதியவற்றைக் கண்டு ஆத்திரமும் கொண்டேன். "அந்தக் காலத்துப் படிப்பு அவ்வளவுதான் போலும்" என்று ஒருவாறு ஆத்திரம் அடங்குவேன்.

ஒரு விடுமுறையின் போது என் மகனை அழைத்துக் கொண்டு ஊர்க்குப் போயிருந்தேன். என் தந்தையார் தம் பேரனோடு ஒருநாள் திண்ணையில் பேசிக்கொண்டிருந்தார். அவனை வாய்பாடு கேட்டு மனக்கணக்குக் கேட்டார். என் பையன் விடை சொல்ல முடியாமல் திகைத்தான். உடனே பாட்டனார் தம் காலத்துப் படிப்பின் பெருமையைப் புகழ்ந்து சொல்லி, "இந்தக் காலத்துப் படிப்பே இவ்வளவுதான். அடிப்படை இல்லாத படிப்பு" என்றார். என் மகனுடைய முகத்தில் சுருக்கம் கண்டேன். இதுதான் நல்ல சமயம் என்று நான் மெல்ல அவரோடு பேசத் தொடங்கினேன்.

"கணக்கு இருக்கட்டும்; தமிழ் எழுதச் சொல்லிப் பாருங்கள். உங்களைவிட நன்றாக எழுத்துப் பிழை இல்லாமல் எழுதுவான்" என்றேன்.

அப்போதுதான் அவர் வாயிலிருந்து உண்மை வெளிப்பட்டு என் ஐயம் தீர்ந்தது. அடங்கியிருந்த ஆத்திரமும் அழிந்தது. "ஆமாம்; இவன் என்னைவிடத் தமிழ் நன்றாக எழுதலாம், ஊமையோடு வாயாடி போட்டிக்குப் போனது போல்தான் இது. நான் பள்ளிக்கூடத்தில் தமிழே படித்ததில்லை. நானாகப் பார்த்துப் பார்த்துத் தமிழ் எழுத்துக்களை வீட்டில் கற்றுக் கொண்டேன். வாத்தியாரிடம் படித்ததெல்லாம் தெலுங்குதான். அந்தக் காலத்தில் இந்த ஊரில் தெலுங்கில் எழுதினால்தான் பத்திரம் ரிஜிஸ்டர் ஆகும். தெலுங்கில் விண்ணப்பம் எழுதினால்தான் தாசில்தாருக்குப் போய்ச் சேரும். அதனால் இந்த ஊரில் அப்போது எல்லாரும் தெலுங்குதான் படித்தார்கள்" என்றார்.

* * *

சில ஆண்டுகளுக்கு முன் திருப்பதிக்குச் சென்றபோது என் உறவினர் ஒருவர் அங்கு வேலையாகச் சென்றிருந்தவர் ஒரு குறை சொன்னார். அவருடைய பையனுக்கு வயது ஐந்து ஆகிவிட்டது என்றும், அவனைத் தொடக்கப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பலாம் என்றால் எந்தப் பள்ளிக்கூடத்திலும் தமிழ் எழுத்

துக் கற்றுக் கொடுப்பதில்லை என்றும் சொன்னார். அன்று மாலை திருப்பதி முனிசிபல் கவுன்சிலர் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தபோது இதைப் பற்றிக் கேட்டேன். அவரால் சில உண்மைகள் அறிந்தேன். அவரும் தமிழ் பேசும் கவுன்சிலர்தான். அவரைப்போல் தமிழர் ஆறுபேர் முனிசிபாலிடியில் உறுப்பினராக இருப்பதாகக் கூறினார். ஊரில் உள்ள மக்களில் கால்பகுதிக்கு மேற்பட்டவர் தமிழராம். தொடக்கப் பள்ளிகள் பல இருக்கின்றனவாம். ஆனால் ஒன்றிலும் தமிழ் கற்பிப்பதில்லையாம். உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் மட்டும் தமிழ் கற்க இடமுண்டு. தமிழ் எழுத்துக் கற்கத் தொடங்க வேண்டுமானால், தனியே நடத்தும் திண்ணைப் பள்ளிக்கூடங்களே புகலிடமாம். காரணம் கேட்டால் அந்த ஜில்லாவின் நடவடிக்கை, ஆட்சி எல்லாம் தெலுங்கில் நடைபெறுவதால், தமிழ் தேவைப் படுவதில்லை என்றார்.

* * *

தமிழும் தெலுங்குமாகக் கலந்துள்ள பகுதிகளில் தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ் படிக்க வழி இல்லை.

காரணம் என்ன? சித்தூர் ஜில்லாவில் பெருந்தொகையான மக்கள் தமிழ் பேசுவோராக இருந்தாலும், ஜில்லாவின் அரசியல் மொழி தெலுங்கு. பொது மக்களுக்குத் தாய்மொழியைப் பற்றி அவ்வளவாகக் கவலை இருப்பதில்லை. பொது வாழ்க்கைக்கு வேண்டிய அரசியல் மொழியைப் பற்றியே அவர்கள் எப்போதும் கவலை கொள்வார்கள். அதனால் அந்த ஜில்லாவின் அரசியல் மொழியாகிய தெலுங்கைக் கற்பதை இயற்கையாகக் கொண்டுவிட்டார்கள். தாய்மொழி வளமானதாக இருந்தாலும், தொன்று தொட்டு வந்த பெருமையுடையதாக இருந்தாலும், வேறு என்ன சிறப்புப் பெற்றிருந்தாலும் பொது மக்களுக்குக் கவலை இல்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் பொது வாழ்க்கைக்கு, அரசியல் வாழ்க்கைக்கு உரிய மொழியே ஆகும்.

அரசியல் மொழியே மக்கள் கற்கும் மொழியாகும் என்பது ஒரு ஜில்லாவில் காணும் உண்மை மட்டும் அல்ல; உலகெங்கும் காணும் உண்மையாகும்.

தமிழ்நாட்டில் ஒரு தலைமுறைக்கு முன் தமிழைக் கற்காமல், தமிழ் எழுதத் தெரியாமல் தமிழ் பேசத் தெரியாமல் உயர்நிலையில் இருந்த தமிழர் எத்தனை பேர்! அவர்கள் ஏன் தமிழ் கற்கவில்லை? ஏன் தமிழ்த் தொடக்கப் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாமல் ஆங்கிலக் கான்வெண்ட் பள்ளிகளுக்குச் சென்று கற்றார்கள்? பலர் இரண்டாம் மொழியாகிய தமிழ் வேண்டாம் என விதிவிலக்குப் பெற்று ஆங்கிலம் மட்டுமே கற்று முன்னேறியது ஏன்? பழைய விடைதான்; தமிழ்

இந்த நாட்டின் அரசியல் மொழி அல்ல; ஆங்கிலமே அரசியல் மொழி, ஆங்கிலம் கற்றால் போதும் என்பதுதான்.

1940-ல் எச். ஜி. வெல்ஸ் 'நான் எதிர் நோக்குவன' (My Anticipations) என்ற நூல் எழுதியபோது பிரஞ்சு மொழியே உலக மொழியாக விளங்கிவிடும் என்று எழுதினர். அவருடைய வாழ்நாளில் அது பொய்யாகி விட்டதைக் கண்டார். ஏன் பொய்த்தது? ஐரோப்பிய அரசியலில் பிரஞ்சுக்காரர் செல்வாக்குப் பெறக்கூடும் என்றும், அதன் வாயிலாக உலக அரசியலிலும் செல்வாக்குப் பெறக் கூடும் என்றும் அவர் எதிர்பார்த்தார். அவர் எதிர்பார்த்தவாறு பிரஞ்சுக்காரர் செல்வாக்குப் பெறவில்லை. அதனல் உலகில் பல நாடுகளைக் கட்டியாளும் செல்வாக்குப் பெற்ற ஆங்கிலேயருடைய ஆங்கில மொழியே உலக அரசியல் மொழியாக வளர்ந்தது; இன்று உலக மொழியாக விளங்குகின்றது.

உண்மை இதுதான்; இதை யாரும் மறைத்துப் பயன் இல்லை. தமிழ் பலவளம் படைத்துப் பல மொழிக்கும் தாயாகும் பெருமையும் பெற்றுத் தொன்மைச் சிறப்புடையதாய் விளங்குவதாகப் பெருமை கொள்ளலாம். அதனல் அது வாழமுடியாது. மொழியின் உயிர் புலவரிடம் இல்லை; பொது மக்களின் உள்ளத்தில்தான் உள்ளது. மக்களின் வாழ்க்கை அரசியலை அடிப்படையாகக் கொண்டது. ஆகையால் எந்த மொழி அரசியல் மொழியாக விளங்குமோ அந்த மொழிதான் மக்கள் மொழியாக விளங்கும்; நேற்றுத் தோன்றிய கொச்சை மொழியாக இருந்தாலும் அரசியல் மொழியானல் ஓங்கி வாழமுடியும். உலகம் தோன்றிய நாளில் தோன்றிய பண்பட்ட மொழியாக இருந்தாலும் அரசியல் மொழியாக விளங்கவில்லையானல் வாழ வழி இல்லை. ஆகவே தமிழ்நாட்டின் ஆட்சி தமிழில் நடைபெற்றால் தான் தமிழன் தமிழைப் படிப்பான்.

—'புது வாழ்வு'

(48-ம் பக்கத் தொடர்ச்சி)

"இந்த வக்கீல்கள் எல்லாம் கண்ட கேள்விகளைக் கேட்டு என்னை மாட்டி வைக்கப் பார்ப்பார்கள்; ஆதலால் நான் உண்மையே சொல்லிக்கொண்டு வந்தால் எந்தவிதக் கஷ்டமும் இருக்காது என்று என் தகப்பனர் எனக்குச் சொல்லிக் கொடுத்தார் சார்!" என்று பையன் பதிலளித்தான்.

அமைதியில்லா என் மனமே

[ஜே. ஜே. துரைராஜ், பி. ஏ., எல். டி.]

"அமைதியில்லா என்மனமே!" அன்று இரவு பத்தரை மணி. ஏனோ எனக்குத் தூக்கம் வரவில்லை. ஊர் அடங்கி விட்டது என்று நினைத்த என்னை "அமைதியில்லா என் மனமே!" என்று அடுத்த வீட்டுக் கிராம போனில் இருந்து வந்த வார்த்தைகள் ஒரு அசைப்பு அசைத்து விட்டன. இரவிலா இந்தப் பாட்டு? எல்லோரும்—என்னைத் தவிர—நிம்மதியாய்த் தூங்குகிற வேளையிலா இப்பாட்டு என்று என் மனம் கேட்கத் துணிந்தது.

அயர்ந்து தூங்கலாம் என்று கண்ணை மூடினேன். ஆனால் காதை மூட முடியாததால், அப்பாட்டு என் மூளைக்குள் வந்து, என் மனதையும் நிம்மதியில்லாமல் ஆக்கிவிட்டது. என் மனக் குதிரை கட்டுக்கு அடங்காமல், எதை எதையெல்லாமோ யோசித்துக்கொண்டு, வாயு வேகத்தில் பறந்து சென்றது.

ஆம், இன்று அநேக மக்களின் வாழ்க்கையில் நிம்மதி இல்லை. எப்போதும் விறைத்த வண்ணமாக இருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. இக்காரணத்தினாலேயே அநேகருக்கு அதிக இரத்த அமுக்கம் என்ற நாகரிக வியாதி வந்துவிடுகிறது. கவலை, எதிர்காலத்திற்குரிய அச்சம், அவநம்பிக்கை, பயம், இவை யாவும் சேர்ந்து, சதி செய்து, வாழ் நாட்களைக் குறைத்துவிடுகின்றன.

மனிதனைப் பிடிக்கும் வியாதிகள் இரு காரணங்களால் வரலாம். வியாதிக் கிருமிகளால் டைபாயிடு, டிப்தீரியா, வைசூரி, க்ஷயரோகம் முதலிய நோய்கள் வருகின்றன. உறுப்புகள் பலம் குன்றி, செயலற்றுப் போவதின் விளைவாய், இருதய நோய், இரத்த அமுக்கம், இரத்தக் குழாய்கள் சம்பந்தமான நோய்கள் உண்டாகலாம்.

அமைதியின்மைக்கு முக்கிய காரணம் நம் மனதின் ஒழுங்கின்மையே. தாறுமாறான மனம், பளுவான மனம். இதற்குச் சந்தேகமே இல்லை. ஒழுங்கீனம் குழப்பத்தை உண்டாக்குகிறது. குழப்பம் விறைப்பை உண்டு பண்ணுகிறது. எனவே இப்படிப்பட்ட மனம் எதிலும் நிலைக்காது. எந்தச் சர்ச்சையையும் தீர்த்து வைக்காது, வைக்கவும் முடியாது. ஒரு சர்ச்சையிலிருந்து மற்றொன்றுக்குத் தாவித் தாவிப் பாயுமே ஒழிய, ஒன்றையும் முடிவு கட்டுவதில்லை. எனவே சர்ச்சைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகும்.

இதன் விளைவு என்ன தெரியுமா? "அப்பா, என்னால் ஒன்றும் செய்ய இயலாது" என்று ஒரு நாள் நம் மனம் அலறி விடுகிறது. அச்சமயத்தில் நம் மனம்—உடல் குளிரினால் நடுங்குவது போல—நடுக்கம் எடுத்து விடுகிறது. உஷ்ணமான இடத்திலிருந்து குளிரான இடத்திற்குத் திடீரென்று ஒருவன் போனால், அவன் உடல் நடுங்கத்தான் செய்யும். உஷ்ண நிலை மாறுதலை உடல் சமாளிக்கப் படும் சிரமத்தைத் தான் நாம் நடுக்கம் என்று சொல்லுகிறோம். அரை நிமிஷம் உடல் நடுங்குவதால், ஒரு மணி நேரம் கடின வேலை செய்யும் போது இழக்கும் வலிமையை ஒரு மனிதன் இழக்கிறான் என்று காரியம் அறிந்த நிபுணர்கள் கணக்கிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். அது போலவே, மனதில் நடுக்கம் ஏற்பட்டாலும், நமக்கு வலு நஷ்டம் ஏற்படுகிறது.

ஒவ்வொரு காரியமாக எடுத்து, அதன் மேலே உங்கள் பூரண கவனத்தையும் செலுத்தி, கூடுமானால் அதற்கு ஒரு முடிவும் கட்டுங்கள். அதன் பின் தான் அடுத்த காரியத்தை உங்கள் மனக் கண் முன் கொண்டு வாருங்கள்.

ஆபீஸில் வேலை செய்யும் ஒருவருக்கு ஆயிரம் ஆயிரமாகக் காகிதங்கள் வந்து குவிந்தன. ஒரு நாள் தன்னுடைய மேசையைப் பார்த்துத் தானே திகைத்துப் போனார். ஆளை மறைக்கும்படியாகக் காகிதங்கள் குவிந்திருந்தன. இதற்கு ஒரு யுக்தி செய்ய வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. பேசாமல் நாற்காலியில் உட்கார்ந்தார். மேலாக இருந்த காகிதத்தை எடுத்தார். அதை வாசித்தார். அதற்குப் பதில் அளித்தார். அதன் பின் அடுத்த காகிதத்தை எடுத்தார். வாசித்தார். பதில் எழுதினார். இப்படியாகச் செய்து கொண்டே போனார். கடைசியில் மேசையில் இருந்த காகிதங்கள் எல்லாம் மறைந்தன. ஆம், இதைத் தவிர வேறு எந்தச் சிறந்த வழியை அவர் கையாண்டிருக்க முடியும், நீங்களே சொல்லுங்கள். ஆபீஸ் வேலை மாத்திரம் அல்ல, மற்ற அலுவல்களும் அப்படியே தான். மனதை ஸ்திரப்படுத்திக்கொண்டு காரியத்தைத் துவக்கிவிட வேண்டும். பின்பு வேண்டியதெல்லாம் விடாமுயற்சிதான். "ஆயிரம் மைல் பிரயாணம் என்றாலும் முதல் அடியில் தான் அது ஆரம்பமாகிறது" என்று அர்த்தம் கொள்ளும் சீனப் பழமொழி ஒன்று இருக்கிறது.

திட்டம் போட்டு வேலை செய்தால், நமக்கு ஒரு திறமை உண்டாகிறது. இது முற்றும் உண்மையே. பெரிய பொறுப்பையும் பொறுமையுடன் எடுத்து நடத்த முடியும். இன்னும் அதிகமாக வேலை செய்ய தெம்பு கிளம்பும். நீங்கள் செய்யும் வேலையிலே ஒரு இன்பம் பிறக்கும்.

முயற்சி வெற்றி தரும், வாஸ்தவம். என்றாலும் இது முற்றும்

உண்மையல்ல. டென்னிஸ் ஆட்டத்தில் வெற்றி பெற்று, தனது கீர்த்தியை உலகெங்கும் நாட்ட வேண்டும் என்று ஒருவர் போட்டியில் இறங்கினர். அவருடைய மடக்கப்பட்டிருந்த கீழ் உதடு அவருடைய மன உறுதியைக் காட்டினது. மட்டையை கெட்டியாகவும் இறுக்கமாகவும் பிடித்துக்கொண்டிருந்தார். பந்து போகும் மார்க்கத்தையும் வரும் மார்க்கத்தையும் கூர்ந்து கவனித்து, பந்தை மட்டையால் அடித்தார். செய்த ஒவ்வொரு காரியத்தையும் சிரமப் பட்டுச் செய்தார். கடைசியில் வெற்றியைத்தான் காணவில்லை. ஏன் தெரியுமா? அவருடைய கைகளும் கால்களும் நரம்புகளும் தளர்த்தப்படாமல், விறைப்பான ஸ்திதியில் இருந்தன. வெற்றியை உண்டாக்கும் நிலை இது அல்ல. இன்னொருவர் செய்த காரியத்தைப் பாருங்கள். அவரும் டென்னிஸ் ஆட்டக்காரர் தான். ஆனல் வெற்றி பெறுவது எப்படி என்ற இரகசியத்தை அறிந்த பேர் வழி. டென்னிஸ் கோர்ட்டில் இறங்கினவுடன், நாற்பத்து இரண்டாயிரம் ஜனங்கள் சூழ்ந்து நின்று வேடிக்கை பார்க்க, தன் கண்களிலிருந்த கண்ணுடியை நாசுக்காகக் கழற்றி, தனது பாக்கட்டிலிருந்து ஒரு தூய கைத்துண்டை எடுத்து, மெதுவாகவும் கருத்தாகவும் அதைத் துடைத்துக்கொண்டிருந்தார். இச் செய்கையால் அவரது தசை நார்களுக்குத் தகுந்த அளவு தளர்ச்சியை உண்டு பண்ணிக்கொண்டார். ஆட்டத்தில் ஜயிக்க வேண்டுமே என்று கவலைப்பட்டு, மூஞ்சை சுளித்துக் கொண்டிருக்கவில்லை. அவருடைய கைகள் மட்டையை இடுக்கி போல், இறுகக் கௌவிக் கொண்டும் இருக்கவில்லை. நிதானமாய் விளையாடினர். என்ன வித்தியாசம், பாருங்கள்!

பேச்சாளர் விஷயத்தில் இக் காரியம் இன்னும் அதிகமாகப் புலப்படும். லண்டன் மா நகரில் மேயர் விருந்து ஒன்று நடந்தது. அயல் நாட்டுப் பிரமுகர் ஒருவரைக் கௌரவப்படுத்த ஏற்பாடு பண்ணப் பட்டிருந்தது இந்த விருந்து. மேயரும் பிரமுகரும் ஒரே மேசையில் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது பிரமுகர் அவரைப் பார்த்து, "அதோ மூன்று பேர் உட்கார்ந்திருக்கிருர்களே, அவர்கள் யார்? ஏதோ தூக்குமேடைக்குப் போகிறவர்கள் மாதிரி அல்லவா சோர்ந்து போயிருக்கிருர்கள்" என்று கேட்டார். "ஓ அவர்களா? அவர்கள் தான் நமது விருந்து முடிந்தவுடன் பேசப் போகிறவர்கள்" என்ற பதில் கிடைத்தது. அன்றைக்கு அவர்கள் பேச்சு சுவை இல்லாமலிருந்தது என்று சொல்லவும் வேண்டுமோ? அப்படி விறைத்துப் போயிருந்தால் எப்படி வார்த்தைகள் விசையுடன் வர முடியும்? தொனி எப்படி இனிமையாக இருக்க முடியும்? ஜனங்கள் எப்படி அதை ரசித்துக் கொண்டிருப்பார்கள்?

உங்கள் வேலை எதுவாய் இருந்தாலும்—மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதோ, புத்தகம் எழுதுவதோ, பயிர்த் தொழிலோ, பிரசங்கம் செய்வதோ—உங்கள் முழுத்திறமையையும் சக்தியையும் அதற்காகச் செலவிடுங்கள். கஷ்டப்பட்டு உழையுங்கள். எதையும் அற்பமாக எண்ணி, அசட்டை பண்ணிவிடாதீர்கள். ஆனால் விறைப்பான நிலையில் உங்களை வைத்துக்கொள்ளாதீர்கள். தளர்ந்த தசைகளும், அவசரப்படாத மூளையும், சாந்தியுள்ள உள்ளமும் சேர்ந்து, அற்புதங்களைச் செய்யக்கூடும்!

வெற்றி பெற வேண்டுமே என்று கவலைப்பட்டு சிரமத்துடன் காரியங்களைச் செய்தால், ஒரு வேளை சித்தி கிட்டமால் போய்விட்டாலும் விடலாம்.

மனிதனை கடவுள் ஒரு முடுக்கி விட்ட இயந்திரத்தைப் போல் சிருஷ்டித்து விட்டு, பின்பு அவனைப் பற்றி யாதொரு கவலையும் எடுத்துக்கொள்ளாமல் விட்டுவிடவில்லை. அவர் மனிதனை அடிக்கடி—அவன் விரும்பும் போதெல்லாம் புதுப்பித்துக் கொண்டே வருகிறார். எனவே இந்தத் தெய்விகத் தொடர்பைப் பயன் படுத்திக்கொண்டால், நம்முடைய ஆத்துமாவுக்கும் சரீரத்திற்கும் மனதிற்கும் புத்துயிர் உண்டாகும் என்பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை. இதுவே வாழ்க்கையில் வெற்றி பெற வழி.

தாமஸ் எடிசன் என்ற விஞ்ஞானியின் மனைவி அவரைப் பற்றிச் சில ரசமான தகவல்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்லுவதாவது: "என் புருஷனுக்கு வெகு நேரம் விடாமல் கஷ்டப்பட்டு உழைக்கக் கூடிய திறன் உண்டு. அதன் பின் அவர் கட்டிலில் படுக்க வேண்டியது தான் தாமதம். உடனே அயர்ந்து நித்திரையாகி விடுவார். காலையில் எழுந்திருக்கும் போது, புது பலத்துடன் காணப்படுவார்." இதனால் எடிசனும், இயற்கையும் எவ்வளவு நெருங்கி வாழ்ந்தார்கள் என்பது தெளிவாகிறது. அவருடைய மனதிலே குழப்பம் என்பதே கிடையாது. அவர் வாழ்வு என்றும் சக்தி ததும்பியதாக விளங்கினது. அவர் ஓர் இயற்கை மனிதன். இயற்கையுடன் நட்பும் உறவும் கொண்டாடினார். எனவே அவர் உள்ளத்திலே அத்தனை அதிசயமான எண்ணங்கள் தோன்றின. மனிதனும் கடவுளும் ஒன்று சேர்ந்தால் முடியாத காரியம் என்ன இருக்க முடியும்?

ஓர் உயர்ந்த உத்தியோகஸ்தர் எப்பொழுதும் மன நிம்மதியுடன் காணப்பட்டார். அதன் காரணத்தை விசாரித்த போது, எனது அலுவல்களுக்கு மத்தியில் இரண்டு நிமிஷத்தைத் தனியே எனக்கென்று பிரத்தியேகப்படுத்திக் கொள்கிறேன். அப்போது என் கண்களை மூடி, கடவுளைப் பற்றி நினைக்கிறேன்—என்னுடைய வேலையைப் பற்றி

அல்ல. இந்த இரண்டு நிமிஷங்கள் எனது மனதிற்கும் உடலுக்கும் வேண்டிய புத்துயிர் கொடுக்கின்றன என்று சொன்னால், அது மிகையாகாது" என்று சொன்னார்.

ஆகாய விமானத்தில் பறந்து சென்ற ஒரு விமானி, திடீரென்று விபத்துக்குள்ளானான். விமானம் பற்றி எரிந்து, கீழே விழுந்தது. உயிர் தப்பினான். ஆனால் என்ன பயன்? விழுந்த அதிர்ச்சி அவனுடைய நரம்புகளைத் தாக்கிவிட்டது. எம்பொழுதும் தன்னைச் சுற்றி வெடி குண்டுகள் வெடித்துக்கொண்டிருப்பது போன்ற ஒரு பீதி ஏற்பட்டது அவனுக்கு. ஒரு சக்தி தன்னை நூறு துண்டுகளாகப் பிய்த்து எறிவதைப் போல் ஒரு பிரமை உண்டானது. வாய்விட்டுக் கதறி அழ வேண்டும் போல் இருந்தது. தூக்கம் இம்மிகூட வரவில்லை. காலையில் எழுந்தால், எப்போது பகல் வேளை தொலையும் என்று இருக்கும். இரவு நேரம் வந்தால், எப்போது விடியும் என்று காத்திருப்பான். இந்தப் பாடு படுவதற்கு, அன்றைக்கே செத்துப் போயிருந்தால் நன்றாயிருக்குமே என்று அடிக்கடி யோசித்தான்.

ஒரு ரப்பர் துண்டைப் போல் மீட்க முடியாத நிலைக்கு நீட்டப் பட்டிருந்த இந்தப் பரிதாபமான மனிதனுக்கு யாரும் உதவிசெய்ய முடியவில்லை. அவன் உள்ளத்தில் அமைதி இல்லை. என்ன செய்வான் பாவம்! ஒரு நாள் கைதேர்ந்த ஒரு கிறிஸ்தவ வைத்திய நிபுணரைப் போய்ப் பார்த்தான். இவனுடைய வியாதி சரீரத்தை அல்ல, மனதையே பாதித்திருக்கிறது என்பதை அவர் வெகு விரைவில் அறிந்து கொண்டார். எனவே அதற்கான சிகிச்சையைக் கையாண்டார். அவர் கொடுத்த புத்திமதியாவது: "அப்பா, இரவில் படுக்கைக்குப் போகுமுன் உன்னையே நீ தளர்த்திக்கொள்ளப் பழக வேண்டும். படுக்கையில் மல்லாந்து படுத்தவாறே, உனது இரு கரங்களையும் தூக்கி, தளர்ச்சியுடன் உனது சரீரத்தின் இரு பக்கமும் விழும்படிச் செய். இப்படி மூன்று அல்லது நான்கு முறைகள் செய். பின்பு உன் முழு சரீரமே அமைதியால் நிறைந்திருப்பது போன்று மனோபாவனை செய். இமைகளை மெதுவாக மூடு. அவைகளிலிருந்து எல்லா அயர்ச்சியும் பறந்தோடுவதுபோல் முடியுமானால் கற்பனை செய். விளக்கை அணைத்துவிடு. அந்த வேத வாக்கியத்தை உன் மனதில் சொல்லிக்கொள்: 'கடவுள் என் மேய்ப்பர், எனக்கு ஒன்றும் குறைவில்லை.' இதுவே ஒரு மந்திர மருந்தென நம்பு. இந்த எண்ணம் உன் மனதில் ஊறட்டும்."

அந்த மனிதன் மேற் கண்டவாறு சில மாதங்கள் செய்தான். கடைசியில் சுகமும் அடைந்தான்.

ஒரு வேளை நமது நிம்மதியற்ற நிலைக்குக் காரணம் நமது எண்

ணங்களாக இருக்கலாம். காயப் பட்ட ஒரு விரலைக் குணப்படுத்துவதைப் போல், நமது எண்ணங்களையும் சுக நிலைக்குக் கொண்டு வரலாம். ஒரே ஒரு வித்தியாசம். வேண்டியது டின்சர் அயோடின் அல்ல. அதை விட மிகவும் சிலாக்கியம் வாய்ந்த, ஆண்டவன் கொடுக்கும் அமைதி எண்ணங்களே. யோசனைகளைக் குணப்படுத்த யோசனைகளால் தான் முடியும்.

ஆவடியில் இருந்து கொண்டு பட்டணத்தில் ஒரு காரியாலயத்தில் வேலை செய்து வந்த ஒரு மனிதனின் கதையை அவரே சொல்லட்டும், கேளுங்கள்: "என்னைப் போல் நிம்மதியற்ற வாழ்வு வேறு எவருக்கும் இருந்திருக்குமோ என்பது சந்தேகம். காலையில் எழுந்திருந்து, அவசரம் அவசரமாக ஸ்நானம் செய்து, சுடச் சுடப் பட்சணங்களை அருந்திவிட்டு, ரயிலடிக்கு ஓடி வருவதற்கும், வண்டி வருவதற்கும் சரியாய் இருக்கும். இடித்துப் பிடித்து, வண்டியில் ஏறி, உட்காருவேன். ஜனக்கூட்டம் அதிகமாய் இருந்தால், எனக்கு வரும் கோபத்திற்கு அளவில்லை. பத்து மணி அடிக்கும் பொழுது, ஆபீசுக்குள் நுழைவேன். அங்கே எப்பொழுதும் எனக்கும் என் அதிகாரிக்கும் லடாய்தான். அவர் கோபமாக எரிந்து விழுவார். நான் முணு முணுத்துக் கொண்டே இருப்பேன். இந்த நாடகம் மாலை ஐந்து மணி மட்டும் நடக்கும். யாரைப் பார்த்தாலும், எனக்குக் கோபம் தான். எல்லோரும் திருப்தியற்றவர்களாக எனக்குக் காட்சி அளித்தார்கள். எவரும் எனக்குப் பிடிக்கவில்லை. உலகமே சதி பண்ணி, என்னை அதிருப்திப்படுத்தினது என்று எனக்குத் தோன்றினது. சூழ் நிலையை வெறுத்தேன். சுற்றத்தாரை வெறுத்தேன். சகலத்தையும் வெறுத்தேன். சகலரையும் வெறுத்தேன். இந்த அமைதியற்ற நிலையில் சில காலம் கழித்தேன். ஒரு நாள் திடீரென்று என் மனதில் ஒரு யோசனை உதித்தது. ஒரு வேளை இந்த அமைதியற்ற நிலைக்கு நானே தான் காரணமாக இருக்கலாமோ என்ற சந்தேகம் உண்டானது. ஆம், நான்தான் இதற்கு காரணம் என்று உணர்ந்தேன். ஏன் இதை இவ்வளவு நாளும் நான் கண்டு பிடித்துக் கொள்ளாமல் இருந்தேன் என்பதுதான் பெரிய ஆச்சரியமாக இருக்கிறது! இன்னொரு சத்தியத்தையும் நான் தெளிவாய் அறிந்து கொண்டேன். இது முற்றும் உண்மை. எனவே என்னால் முடியாத வேலையைக் கடவுளுக்கு ஒப்புக் கொடுத்தேன். அவரே என்னை மாற்றினார். பிறகு என்னால் மற்றவர்களை நேசிக்க முடிந்தது. புன்சிரிப்பும் இன்சொல்லும் சேர்ந்து சாதிக்க முடியாத காரியம் ஒன்றுமே இல்லை."

வெளியே புயல் அடிக்கலாம்; ஆனால் அது நமது உள்ளத்தைத் தாக்கி, அதன் நிம்மதியைக்

(அடுத்த பக்கம் பார்க்க)

பாலிலிருந்து பட்டு

[பத்மா ராஜகோபால்]

சீதையும் சாவித்திரியும் மரவுரி உடுத்திக் கொண்டிருந்ததைப் பற்றி நமக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனால் வருங்காலப் பெண்கள் பாலை-ஆம், பசுவின் பாலை உடுத்திக் கொண்டு உலவப் போவது என்னமோ நிச்சயம். பாலை மட்டுமல்ல; கரியையும் உடுத்துவர்கள். நாளைய நாரிமணிகளின் மாற்று உடைகள், சோளக் கொண்டை, சோயா வைக்கோல், காப்பிக் கொட்டை, வேர்க்கடலை இவற்றால் ஆனவையாக இருக்கும். பத்திரிகைகளில் நாளைய நிருபர்கள், ''குடியரசு தினத்தை ஒட்டி நடைபெற்ற விருந்திற்கு ஸ்ரீமதி ...... வெள்ளைநிற பால் புடவையும் அதற்குப் பொருத்தமான வைக்கோல் முழுக்கைச் சோளியும் அணிந்திருந்தார். அவரது வேர்க்கடலை செருப்புகளும், காரமணி கைப்பையும் அவரது அழகிய உடையின் வனப்பை எடுத்துக் காட்டின. குமாரி...... யின் நிலக்கரி தாவணியும், சோளக்கொண்டை ரவிக்கையும் கவர்ச்சிகரமாக இருந்தன. எப்போதுமே தனிப்பட்ட முறைகளில் ஆடை அலங்காரம், செய்து கொள்ளும் ஸ்ரீமதி...... பழங்கால பூச்சி பட்டு புடவையும், பருத்தி நூல் சோளியும், அணிந்திருந்தார்'' என்றெல்லாம் எழுதலாம்.

இது நம்பத் தகுந்ததாக இல்லை என்றாலும் உண்மைதான். விஞ்ஞானிகள் இவ்வெல்லாப் பொருள்களிலிருந்தும் பட்டு தயாரித்துத் தரப் போகிறார்கள்.

செயற்கைப்பட்டு முயற்சி

தொன்று தொட்ட காலமாகவே செயற்கையாக பட்டு தயாரிக்கும்முயற்சிகள் நடந்துவந்திருக்கின்றன. எகிப்தியர்கள் சிலந்தி வலைகளைப் பின்னிப் பார்த்தார்கள். சீனர்கள் பூச்சிகளை அரைத்துக் குழைத்து நூற்றுப் பார்த்தார்கள். இந்தியர்கள் பஞ்சையே பட்டைப் போல நூற்று செய்தனர். ஐரோப்பியரும் எத்தனையோ பொருள்களை வைத்துக்கொண்டு முயற்சித்துப் பார்த்தனர். ஆனால் பட்டுப் பூச்சியின் பட்டுக்கு நிகரான நூல் யாருக்கும் கிடைக்கவில்லை. விஞ்ஞானம் வளர வளர, புதுமைப் பெண்ணின் அலங்காரத்திற்காக செயற்கைப்பட்டு தயாரிக்கும் முயற்சிகள் தீவிர

(முன் பக்கத் தொடர்ச்சி)

குலைக்க வேண்டிய அவசியம் இல்லை. தசைகளைத் தளரவிட்டு, எண்ணங்களை அடக்கி, அமரிக்கையாய் வாழும் இரகசியத்தை அறிந்தவர்களுக்கு, அமைதியுள்ள மனம் கிட்டாப் பொருள் அல்ல!

மாயின. இந்த முயற்சியில் விஞ்ஞானிகள் பயன்படுத்திச் சோதித்துப் பார்த்த பொருள்கள் அனந்தம். கடைசியில் வெற்றி கண்டு விட்டார்கள். புதுமைப் பெண்ணின் சந்நிதியில் கரியாலும், பாலாலும், மரத்தாலும், செய்யப்பட்ட பட்டுகள் விஞ்ஞானத்தின்காணிக்கையாகக் குவியத் தொடங்கிவிட்டன.

பாலிலிருந்து பட்டு உண்டாக்கலாம். அதாவது, பட்டு நெய்யக் கூடிய நூலிழைகள் பாலிலிருந்து கிடைக்கலாம் என்று சமீப காலம்வரை யாருக்குமே தெரியாது; இது சாத்தியம் என்று விஞ்ஞானிகள் கூட நினைக்கவில்லை. பாலில் 'கேஸின்' என்று ஒரு பொருள் உண்டு. இதை அடிப்படையாகக் கொண்டு பலவித இழைகளைத் தயாரிக்க முடியுமாம். இவற்றை உண்டாக்க செலவும் அதிகம் ஆவதில்லை. 'விலையும் மலிவு, நீடித்து உழைக்கவும் செய்யும்' என்றால் பால் பட்டு பாஷணவதில் ஆச்சரியம் என்ன?

பாலை, தயிர் மோர், வெண்ணெய் ஆகப் பயன் படுத்தாமல், பட்டு செய்து பாழாக்கலாமா என்று தோன்றுவது இயல்பு. இந்தப் பட்டு செய்வதில் ஒரு முக்கிய விசேஷம் என்னவெனில், பால் பட்டு தயாரிப்பதினால் பால் வீணாகப்படுவதில்லை. முதலில் வெண்ணெய் சத்துக்களை எல்லாம் பிரித்து எடுத்து விட்டு, சத்தற்ற பாலை மட்டும் அமிலங்களுடன் கலந்து, தயிராக்குகிறார்கள். இந்தத் தயிரிலிருந்துதான், 'கேஸின்' மாவு கிடைக்கிறது. இந்த மாவை இழைகளாக்கிப் பட்டாக நெய்கிறார்கள். ஒரு காலன் பசும் பாலிலிருந்து சுமார் ஐந்து பவுண்டு கேஸின் மாவு எடுத்து இழைகள் செய்யலாம். இந்தப் பால் பட்டு ஒருவித 'ரேயான்' என்று சொல்லலாம்; அதாவது மரப்பொருளைக் கொண்டு ரசாயன முறைகளால் தயாரிக்கப்படும் செயற்கைப் பட்டு வகைகளில் ஒன்று.

பல்வகைப் பட்டு

மரஞ் செடி கொடிகளில் ஸெல்லுலோஸ் என்று பொருள் உண்டு. இதைச் சில திரவங்களில் கரைத்து, பின்னர் வேறு சில அமிலங்களுடன் கலந்தால் ஸெல்லுலோஸ் மீண்டும் இழைகளாகப் பிரிந்து விடுகிறது. இவ்வாறு பிரிந்த ஸெல்லுலோஸால் செய்யப்படும் பட்டுதான் செயற்கைப்பட்டு அல்லது ஆர்ட்ஸில்க் எனப்படுவது. இந்த செயற்கைப் பட்டில் பலவிதங்களுண்டு. பலவித ரசாயன முறைகளால் இந்த இழைகளைப் பிரிக்கிறார்கள். சிலவற்றை தாமிரப்பட்டு என்பார்கள். அஸிடேட் பட்டு பாகு பட்டு, என்பவையும் ஆர்ட்ஸில்க்கள்தான். இவற்றை எல்லாம் வியாபாரிகள் 'ரேயான்' என்று அழைப்பதில்லை. 'ரேயான்' என்று குறிப்பிடப்படுவது ஸெல்லுலோஸ் உப்புகளால் உண்டாக்கப்பட்ட வேறு ஒரு வகை பட்டு.

ரேயான் செய்யும் முயற்சி

முதன் முதலில் பஞ்சு நீக்கிய பின் பருத்திக் கொட்டைகளில் ஒட்டிக் கொண்டிருந்த பஞ்சுப் பிசிர்களைச் செயற்கைப் பட்டாக மாற்றி 'ரேயான்' செய்து வந்தார்கள். தொழில் வளர வளர பல வித மரப்பட்டைகளை உபயோகிக்க ஆரம்பித்தார்கள். இப்போது சோளக் கொண்டை, வைக்கோல, கருப்பஞ் சக்கை, மூங்கில் இவற்றை எல்லாம் கொண்டு ரேயான் செய்ய முயற்சிகள் நடந்து வருகின்றன.

எதிர் காலத்தில் எல்லாருமே 'ரேயான்' உடுத்த ஆரம்பித்து விட்டால், வேண்டிய அளவு மரஞ் செடிகள் கிடைப்பது கஷ்டமாகி விடலாம். இருப்பதையெல்லாம் துணியாக்கிவிட்டால், உலகில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுவிடும். இதனுல் தானே, என்னமோ, ரசாயனிகள் கரி முதலிய கனிஜப் பொருள்களிலிருந்து துணிகள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இக்காலத்தில் எதற்கெடுத்தாலும் அடிபடும் 'நைலான்' கரியால் ஆன ஸில்க்! இன்று உலகில் நைலான் அறியாத நாடே இல்லைஎன்று சொல்லலாம். இத்தனைக்கும் நைலான் கண்டு பிடிக்கப்பட்டு, இருபது வருஷங்கள் தான் ஆகியிருக்கின்றன. 'நைலான் பட்டு' பட்டும் இல்லை பருத்தியும் இல்லை-வெறும் உப்புப் பொருள்.

கரியிலிருந்து பென்ஸின் ஃபினுல் என்று இரு வகைப் பொருள் கிடைக்கின்றன. காற்று, நீர் இவற்றுடன் சேர்ந்து இவை ரஸாயன மாறுதல்கள் அடைந்து, ஹெக்ஸா மிதிலின் டையர்மின் அடிபிக் அமிலம் என்ற பொருள்களாக மாறுகின்றன. இவற்றைக் கலந்து நைலான் 'பாலிமர்' உண்டாக்குகிறுர்கள். 'பாலிமர்' என்ருல் பல சிறிய அணுக்கள் கொண்ட பரமாணு என்பது பொருள். இந்த நைலான் பாலிமர்கள் பார்வைக்கு வெள்ளை சலவைக்கல் துண்டுகளைப் போல இருக்கும். இவற்றை உருக்கி, மிகவும் நுண்ணிய துவாரமுள்ள அச்சுகள் வழியாகப் பிழிந்தால் நைலான் திரவ இழைகளாக வெளிப்படுகிறது, ஒரு விணுடிக்கு 800 கெஜம் வீதம் வெளிவரும் இவ்விழைகள் வெளி வரும்போது காற்றில் உலர்ந்து கெட்டிப்பட்டு விடுகின்றன. இவற்றைக் கதிர்களாக இயந்திரங்கள் சுற்றி வைக்கின்றன.

இந்த இழைகளை அப்படியே துணியாக நெய்வதில்லை. பார்வைக்கு கொஞ்சம் மங்கலாக இருக்கும் இந்த இழைகளை, 'பாலிமர் இழைகள்' என்று சொல்வார்கள். அடுத்த கட்டத்திற்கு 'இழுத்தல்' என்று பெயர். இப்போது இழைகள் அவற்றின் சாதாரண நீளத்தைப் போல நான்கு மடங்காகும்வரை இழுக்கப்படுகின்றன. இப்படி இழுப்பதால் அவற்றிற்கு வலிவு உண்டாகிறதாம்.

இவ்வாறு உருக்கி வார்ப்பதும், இழுத்து செய்யும் இழைகளை தயாரிப்பதும் நைலானில் மட்டுமே செய்யப்படுகின்றன. வேறு எந்த நூலும் இவ்விதம் தயாரிக்கப்படுவதில்லை. இழுக்கப்பட்ட நைலான் இழைகளைப் பின்னர், மற்ற நூல்களைப் போல முறுக்கியும், சாயம் ஏற்றியும், நெய்து அச்சடித்தும் பல்வேறு ரகத் துணிகளாக நெய்கிறார்கள்.

நைலானின் சிறப்புக்கள்

மேல்நாடுகளில் நைலான் 1941ம் ஆண்டிலேயே தயாரிக்கப்பட்டது. ஆனால் முதலில் உற்பத்தியான நைலான் முழுதும் யுத்த காரியங்களுக்காக — பாராசூட் செய்தல், பெல்ட்கள், கயிறுகள் உண்டாக்குதல் இவற்றுக்காகப் பயன் படுத்தப்பட்டது. பொது மக்களின் உபயோகத்திற்கு யுத்த முடிவில்தான் வர ஆரம்பித்தது.

இன்று பெரும்பாலான உடுப்புக்களுக்கும், துணிகளுக்கும் நைலான் உபயோகிக்கப்படுகிறது. பார்வைக்கு வனப்பாக இருப்பது மட்டுமல்ல, இது மிகவும் நேர்த்தியாகவும் மிருதுவாகவும் இருப்பது ஒரு காரணம். ஒரு பலம் நைலானை சுமார் 175 மைல் நீளமுள்ள நூலாக இழுக்கலாம் என்றால், அது எவ்வளவு சன்னமாக இருக்கும் என்று யோசித்துப்பாருங்கள். இவ்வளவு மிருதுவாக இருந்தாலும் நைலானுக்கு வலிவு அதிகம். ஒவ்வொரு நைலான் இழையும் அதே அளவான அலுமினியம் கம்பியை விட இரு மடங்கு அதிக பல முள்ளது. இதைத் தோய்ப்பது சுலபம். வெகு சீக்கிரம் உலர்ந்து போய் விடும். சீக்கிரம் கசங்கிச் சுருங்கிப் போவதில்லை. ஆகையால் இஸ்திரி செய்வது சுலபம். சில வகை நைலான்களை இஸ்திரியே செய்யவேண்டாம். பூச்சிகள், ரசாயனப் பொருள்கள் இவற்றை அதிகம் அரிப்பதில்லை. ஒரு துணிக்கு வேறு என்ன வேண்டும்?

நைலானால் இன்று துணிகள் மட்டும் தயாரிக்கப்படுவதில்லை; வலிவு அதிகமாக இருப்பதால், கப்பல்களில் உபயோகிக்கப்படும் கயிறுகள், மீன் பிடிக்கும் வலைகள், ஜெட் விமானங்களின் டயர்கள் கூட நைலானால் செய்யப்படுகின்றன. இதைத் தவிர, காகித மில்கள், நிலக்கரி சுரங்கங்கள், மெஷின்கள் செய்தல், முதலிய பல தொழில்களில் இது பயன்படுகிறது. இப்பொழுது கூட இது சோதனை செய்யப்பட்டு வருவதால், இதற்கு விஞ்ஞானிகள் இன்னும் எத்தனை வித உபயோகங்கள் கண்டு பிடிப்பார்களோ தெரியாது.

இப்படி நைலானுக்குத் தொழில் உபயோகங்கள் அதிகமாக ஆக, வேறுவித செயற்கைப் பட்டுகள் தயாரிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். அடுத்தபடியாக ரசாயினிகள் கல்லிலிருந்து பட்டு நார் உரித்துக் கொடுத்தாலும் அதிசயப் படுவதற்கில்லை! —'தினமணி சுடர்'

நகைச்சுவைச் செய்திகள்

(தொகுத்தவர் : அன்புப்பழம்நீ)

சாதுரியப் பேச்சு :

ஒரு முறை, கோகலே மண்டபத்தில் மதுபானத்தை மறுமுறையும் அரசாங்கத்தார் புகுத்தியதைக் கண்டிக்க ஒரு கூட்டம் கூடியது. கூட்டத்தில் தமிழ் தெரியாத ஆந்திரர்களில் ஒரு சிலர் திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் தமிழில் பேச ஆரம்பித்த பொழுது "Speak in English–English–English" என்று கூக்குரலிட்டார்கள். இராஜகோபாலாச்சாரியார் உடனே "நீங்களெல்லோரும் சிரிக்கும் சிரிப்பு எனக்குத் தமிழ் சிரிப்பாகத் தோன்றுகின்றதேயன்றி இங்கிலீஷ் சிரிப்பாக இல்லையே! ஆதலால் தமிழில்தான் நான் பேசுவேன்!' என்று சொல்லித் தமிழிலேயே பேசினார்.

வின்ஸ்டன் சர்ச்கில் :

அபேதவாதக் கட்சியினருக்கு சர்ச்சிலின் பேச்சு பிடிக்காது. ஒரு முறை அவர் பேச ஆரம்பித்ததும் அபேதவாதக் கட்சியினர் சிலர் அவர் பேசுவதை யாரும் கேட்க முடியாதபடி கூச்சல் போட்டுக் கூட்டத்தைக் கலைத்து விட்டனர்.

முடிவில் சர்ச்சில் "குரைத்துக் கொண்டே விரட்டி வரும் நாய்களின் ஒன்றின்மேல்தான் கல்லை வீசி எறியலாம். எல்லாவற்றையும் விரட்டியடிப்பது அசாத்தியம்" என்று சொல்லிவிட்டு, ஒரு கட்டிடத்துக்குப் போய் மேல்மாடியிலிருந்து தம் சொற்பொழிவை ஆரம்பித்தார்.

சாக்ரடீசை உதைத்த கழுதை!

கிரீஸ் தேசத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன்பு சாக்ரடீஸ் என்னும் அறிஞர் இருந்தார் அல்லவா? அவரை ஒரு முரடன் அவருடைய நண்பர்களின் முன்னிலையில் காலால் உதைத்தான். அப்பொழுது சாக்ரடீஸ் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். அதைக் கண்ட நண்பர்களில் ஒருவர், இதென்ன இப்படிச் சும்மா யிருக்கிறீர்களே என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அதற்கு சாக்ரடீஸ், "என்னை ஒரு கழுதை உதைத்து விட்டால் நான் உடனே வருத்தப் பட்டுக்கொண்டு மாஜிஸ்டிரேட்டிடம் போய் அதைத் தண்டிக்கும்படி வேண்டிக்கொள்ளவேண்டுமென்று கூறுகிறீரா" என்று கேட்டார்.

ஐயோ டீ செட்டே!

ஆனந்தபவனத்தில் சரோஜினி தேவியாரின் பெட்டி சாமான்கள் வந்திருந்தன. அவற்றில் ஒரு பெட்டி தவிர பிறவற்றை

ஊருக்கு அனுப்பிவிட்டார். எதிர் பாராத விதமாக உடைகளிருந்த பெட்டி அனுப்பப்பட்டு, பாத்திரப்பெட்டி நிறுத்தப்பட்டிருந்தது. அதைத் திறந்து பார்த்து, "ஐயோ டீ செட்டே! உன்னை எப்படி உடுத்திக் கொள்வேன்" என்று குதித்தபடியே கூறினார் சரோஜினி தேவி.

யார் முட்டாள் :

ஹென்றி வார்ட்டு பீச்சர் என்ற பிரபல பாதிரியார் பிளிமத் தேவாலயத்தில் சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்தாராம். அப்பொழுது உறையிட்ட கடிதம் ஒன்று அவருக்கு வந்தது. "முட்டாள்" என்ற ஒரே வார்த்தைதான் அதில் இருந்தது. பாதிரியாரைப் பிடிக்காத யாரோ ஒருவர் எழுதிய கடிதம் அது. பாதிரியார் மிகவும் அமைதியாக அந்தக் கடிதத்திலுள்ள செய்தியைக் கூட்டத்தினருக்கு அறிவித்தார். அவர் சொன்னதாவது :

"அநேக ஆசாமிகள் கடிதம் எழுதிக் கையெழுத்துப் போட மறந்துவிடுவார்கள். அதை நான் கண்டிருக்கிறேன். ஆனால் இந்தக் கடிதக்காரரைப் போல் செய்தாரைக் கண்டதில்லை. இவர் கடிதத்தை எழுத மறந்துவிட்டார். ஆனால் கையெழுத்தைமட்டும் போட்டிருக்கிறார். இது விந்தையல்லவா?"

புதுமாதிரி வேலை நிறுத்தம் :

ஒரு முறை, சீனாவிலுள்ள ஷாங்காய் என்னும் நகரின் மோட்டார் கண்டக்டர்கள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற ஒரு புது மாதிரியான வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் மோட்டார்களை வழக்கம்போல் ஓட்டினார்கள். ஆனால் டிக்கட் வசூல் பண்ணவே இல்லை. இனாமாக மோட்டார் ஓடும் செய்தி அறிந்த மக்கள் கூட்டம் கூட்டமாக மோட்டாரில் ஏறத் தொடங்கினார்கள். இதன் காரணமாக சீனாவிலுள்ள பிரெஞ்சு ரயில்வேக் கம்பெனிக்கும் மோட்டார் கம்பெனிக்கும் ஒரே நாளில் பதினைந்து கோடி சீன டாலர்கள் நஷ்டமாய்விட்டது.

உண்மையே பேசு :

ஒரு சின்னப் பையன் சாட்சிக் கூண்டில் நின்றுகொண்டு கேட்கப்படும் ஒவ்வொரு கேள்விக்கும் நிதானமாகப் பதில் அளித்து வந்தான். நீதிபதிக்குச் சந்தேகம் தோன்றியது. "கோர்ட்டில் என்ன சொல்லவேண்டுமென்று நீ இங்கே வருமுன் யாராவது சொல்லிக் கொடுத்தார்களா?" என்று கேட்டார் அவர்.

"ஆமாம் சார்" என்றான் பையன்.

வாதியின் வக்கீல் வியப்படைந்தார். "இந்தப் பையனை யாரோ தயார் செய்திருக்கிறார்கள் என்பது நிச்சயம்" என்றார் அவர்.

நீதிபதி பையனின் பக்கம் திரும்பி, "உனக்கு யார் என்ன சொல்லிக் கொடுத்தார்கள் என்று எனக்குச் சொல்வாயா?" என்றார்.

(36-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press, 2-65, Broadway, Madras—1.